Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk


THURSDAY, JULY 1, 2021

வியாழக்கிழமை ஜூலை 01, 2021 | ஒளி: 07 கதிர்: 36 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## ‘விலங்குகளுக்கு கொரோனா பரிசோதனை’

சகல மிருகக்காட்சி சாலைகளிலும் உள்ள விலங்குகளுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



### தேர்தல் முறைமை மாற்றத்தில் த.மு.கூ, மு.கா, ஜே.வி.பி

# கூட்டாகச் செயற்பட உறுதி

**விகிதாசார தேர்தல் முறை மாற்றப்படுமானால், அரசியல் ரீதியிலான சிறுபான்மை கட்சிகள், இன ரீதியான சிறுபான்மைக் கட்சிகளுக்குக் கிடைக்கக்கூடிய எல்லா பிரதிநிதித்துவங்களும் இல்லாமற் போகும்**

**மக்களின் சாதாரண விருப்பங்கள், பாராளுமன்றம், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது உறுதிப்படுத்தப்பட வேண்டும்**

தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் சிறுபான்மை கட்சிகளான தமிழ் முற்போக்குக் கூட்டணி (த.மு.கூ), ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் (மு.கா), மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) ஆகியன கூட்டாகச் செயற்படுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

இதேவேளை, இந்தச் செயற்பாட்டில் ஏனைய சிறு கட்சிகளையும் இணைத்துக் கொள்வதற்கும் தீர்மானித்துள்ளன.

தொடர்ச்சி P2




## ‘உறுதியான நிலைப்பாட்டில் இருக்கிறோம்’



அரசியல் ரீதியாகவும் இன ரீதியாகவும் சிறுபான்மை கட்சிகள், இந்த விடயம் தொடர்பில் பொதுவான இணக்கப்பாட்டுக்கு வரவேண்டுமென்ற உறுதியான நிலைப்பாட்டில் இருக்கின்றோம் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ‘வாக்குக்கு பெறுமானம் கிடைக்கவேண்டும்’



இந்த அரசாங்கம், மக்கள் மத்தியில் தமது செல்வாக்கை மோசமாக இழந்திருக்கும் நிலையில், மீண்டுமொரு தேர்தலுக்கு முகங்கொடுப்பதைத் தவிர்ப்பதற்காக, இந்தத் தேர்தல் மறுசீரமைப்புகள் தொடர்பான தெரிவுக்குழுவின் முடிவுகளை அவசரமாக எட்டுவதற்கு முயல்கின்றது என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ‘ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டும்’



அளிக்கப்படும் ஒவ்வொரு வாக்குக்கும் பெறுமதி இருக்கவேண்டும் என்பதில் நாங்கள் ஓரணியில் நிற்கின்றோம். இல்லையேல், மற்றொரு வாக்குக்கு பெறுமதியை அதிகரிப்பது ஜனநாயகத்துக்கும் முற்போக்குக்கும் எதிரானது எனத் தெரிவித்த ஜே.வி.பியின் தலைவரும் எம்.பியுமான அநுரகுமார திஸாநாயக்க, “தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற்படவேண்டுமாயின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்” என்றார்.

தொடர்ச்சி P2

## ‘ராஜபக்ஷரின் வருகை ராஜபக்ஷர்களுக்குப் பலம்’



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷவின் பாராளுமன்ற வருகையானது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் பலமாக அமையும் எனத் தெரிவித்த சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன குணவர்தன, கடந்த காலங்களில் நடைபெற்ற தேசிய தேர்தல்களில் பொதுஜன பெரமுன கட்சி வெற்றி பெறுவதற்கு அவர்தான் முன்னோடியாகச் செயற்பட்டவர் என்றார்.

தொடர்ச்சி P2



## எங்கள் பிள்ளைகள் பயங்கரவாதிகளா?

வவுனியா மாவட்டத்தில் இருந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால், வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்னால், நேற்று (30) காலை 10 மணிக்கு, ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.
சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (படப்பிடிப்பு: க. அகரன்)

### ஆறு நாடுகளின் பயணிகளுக்கு

## நிபந்தனைகளுடன் தடை நீக்கம்

மத்திய கிழக்கின் ஆறு நாடுகளிலிருந்து வருகை தரும் விமானப் பயணிகளுக்கு விதிக்கப்பட்ட தடை, நிபந்தனைகளுடன் நீக்கப்பட்டுள்ளது.

“கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம், ஓமான், பஹ்ரைன், குவைத் ஆகிய நாடுகளிலிருந்து வருகை தரும் பயணிகளுக்கே நிபந்தனைகளுடனான அனுமதி வழங்கப்பட்டுள்ளது” என சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் உபுல் தர்மதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## ஆதிவாசிகளின் தலைவர் தடுப்பூசியைப் பெற்றார்



ஆதிவாசிகளின் தலைவரான ஊருவரிகே வன்னிலா எத்தோ கொரோனா தடுப்பூசியை, நேற்று (30) பெற்றுக்கொண்டார்.

தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட இலங்கையின் முதலாவது பழங்குடியினர் இவராவார்.

தொடர்ச்சி P2

### பாலியல் செயற்பாடுகளுக்காக

## சிறுமியை விற்ற விவகாரம்: 17 பேர் கைது; 20 பேருக்கு வலை

பாலியல் செயற்பாடுகளுக்காக 15 வயதான சிறுமியை, இணையத்தளம் ஊடாகக் கொள்வனவு செய்த மற்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கிய 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் அச்சிறுமியின் தாய், சிறுமியை முதன்முதலில் விற்பனை செய்தவருடன் தகாத முறையில் உறவுகளை பேணும் பெண், ஒட்டோ சாரதி, மோட்டார் சைக்கிள் ஒட்டுநர், சிறுமி தொடர்பான தகவல்களை இணையத்தளத்தில் பதிவேற்றியவர் உள்ளிட்டோர் அடங்குகின்றனர்.

தொடர்ச்சி P2

### முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்:

## கல்குடாவில் கைதான 10 பேரின் விளக்கமறியலும் நீடிப்பு



முள்ளிவாய்க்கால் நினைவு நாளை நினைவேந்தினர் என்ற குற்றச்சாட்டின் கீழ், மட்டக்களப்பு, கல்குடா பகுதியில் வைத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பத்து பேர் தொடர்பான சமர்ப்பணங்களை, எதிர்வரும் 13ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## ‘சீனாவின் கீழுள்ள ஒரு மாகாணமாக இலங்கை அரசாங்கம் செயற்படுகிறது’

■ வா.கிருஸ்ணா



“சீனாவின் வழித்தடத்தில் பயணித்துக் கொண்டிருக்கும் இலங்கை, சீனாவின் ஒரு மாகாணமாகச் செயற்படுகின்றது” எனத் தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், “இது இந்தியாவுக்கோ,

தொடர்ச்சி P2



## சாணக் குழிக்குள் விழுந்து ஆண் குழந்தை மரணம்

■ செ.தி. பெருமாள்

மாட்டுத் தொழுவத்திலிருந்து செல்லும் கழிவு நீருக்காக தமது வீட்டுத் தோட்டத்தில் வெட்டப்பட்டிருந்த 3அடி ஆழமான குழியில் விழுந்து, இரண்டரை வயது குழந்தையொன்று உயிரிழந்த சம்பவம், நேற்று முன்தினம் (29) மஸ்கெலியா- ப்ரௌன்ஸ்வீக் 50 ஏக்கர் தோட்டத்தில் இடம்பெற்றது.

தொடர்ச்சி P2

## இ.ஒ.கூ தலைவராக ஹட்சன் நியமனம்



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவிக்கு ஏற்பட்ட வெற்றிடத்தை அடுத்து, அந்தப் பதவிக்கு ஹட்சன் சமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

தலைவராக இருந்த ஜயம்பதி பண்டார, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட நிலையில் குறித்த பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டது.


இந்நிலையில் பதவியேற்றுள்ள ஹட்சன் சமரசிங்க, 1969ஆம் ஆண்டு நிகழ்ச்சித் தயாரிப்பாளராக ஒலிபரப்புக்

தொடர்ச்சி P2

### எக்ஸ்பிரஸ் பேர்ள் தீப்பரவலால்

## ‘கடல்வாழ் உயிரினங்கள் 200 மரணமடைந்துள்ளன’

**176 ஆமைகள், 4 திமிங்கிலங்கள், 20 டொல்பின்கள்**



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றி எரிந்தமை மற்றும் அதிலிருந்து வெளியேறி எண்ணெய் இரசாயன திரவங்களால், கடல்வாழ் உயிரினங்கள் 200 மரணமடைந்துள்ளன என சட்டமா அதிபர், நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

கப்பலில் ஏற்பட்ட தீயை அடுத்து ஏற்பட்ட சுற்றுச்சூழல் மாசுபாட்டால் 176 ஆமைகள், 4 திமிங்கிலங்கள், 20 டொல்பின்கள்

தொடர்ச்சி P2

## ‘கௌதாரிமுனை பண்ணையால் இந்தியாவுக்கும் அச்சுறுத்தல்’

■ எஸ்.நிதர்ஷன், சுப்பிரமணியம்பாஸ்கரன்

“இந்தியாவை வலிந்து சண்டைக்கு இழுக்கும் செயற்பாடுகளை சீன அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற நிலையில், அதற்கு இலங்கை அரசாங்கம் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகிறது”

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# கூட்டாகச் செயற்பட உறுதி

இது தொடர்பிலான சந்திப்பொன்று, ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று (30) நடைபெற்றது. இதில், ஜே.வி.பியின் சார்பில், பாராளுமன்ற உறுப்பினர்களான அநுரகுமார திஸாநாயக்க, விஜித ஹேரத், பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், வேலுகுமார் ஆகியோரும் முஸ்லிம் காங்கிரஸின் செயலாளரான ஜனாதிபதி சட்டத்தரணி நிஷாம் காரியப்பர், தமிழ் முற்போக்குக் கூட்டணி மற்றும் ஜனநாயக்க மக்கள் கூட்டணியின் கேகாலை மாவட்ட அமைப்பாளர் பரணிதரன் முருகேசு ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## 'உறுதியான நிலைப்பாட்டில் இருக்கிறோம்'

தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று (30) நடைபெற்ற சந்திப்புக்குப் பின்னர், ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விகிதாசார தேர்தல் முறை எக்காரணம் கொண்டும் மாற்றப்படக் கூடாதென்ற தீர்மானத்தில் இருக்கின்றோம். இம்முறை மாற்றப்படுமானால் இந்த விகிதாசார முறையின் கீழ், அரசியல் ரீதியிலான சிறுபான்மை கட்சிகள், இன ரீதியான சிறுபான்மை கட்சிகளுக்குக் கிடைக்கக்கூடிய எல்லா பிரதிநிதித்துவங்களும் இல்லாமற் போகும் என்றார்.

"தேர்தல் முறைமையில் மாற்றங்கள் ஏற்படும் போது, பாராளுமன்றம், மாகாண சபை, உள்ளூராட்சி மன்றங்களில் இருக்கக் கூடிய எல்லா பிரதிநிதித்துவங்களும் அதேயளவிலேயே உறுதிப்படுத்தப்பட்டு காப்பாற்றப்பட்டு மேலே செல்ல வேண்டுமே தவிர, அதை இல்லாதொழிக்கும் எந்தவொரு செயற்பாட்டுக்கும் நாங்கள் உடன்பட மாட்டோம்" என்றார்.

## 'ராஜபக்ஷரின் வருகை ராஜபக்ஷர்களுக்கு பலம்'

யால தேசிய பூங்காவில் புதிய வரவேற்பு வளாகத்தை நேற்று(30) திறந்து வைத்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

பசில் ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகிப்பதற்கு தான் தனிப்பட்ட முறையில் இணக்கம் தெரிவிப்பேன் என்றும், பொருளாதாரம் விவகாரத்தையும், தேசிய உற்பத்திகளை மேம்படுத்தும் பொறுப்பை பசில் பொறுப்பேற்றார். பல நெருக்கடியான சூழ்நிலையில் நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றமடைந்தது என்றார்.

2015ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலிலும் தோல்வியடைய நேரிட்டது அதற்கு பல காரணிகள் செல்வாக்கு செலுத்தின. பாரிய தோல்வியை எதிர்க்கொண்ட போதும் அவர் மனம் தளராமல் அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைத்து 2016ஆம் ஆண்டு தாமரை மொட்டு சின்னத்தில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமன கட்சியை ஸ்தாபித்தார்.

அதனை தொடர்ந்து இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் வெற்றிப் பெறுவதற்கு அவர் வகுத்த திட்டங்கள் பிரதான காரணியாக அமைந்ததால், பாராளுமன்றத்துக்கு அவர் வருவது அனைவருக்கும் பலமாக அமையும் என்றார்.

## கல்குடாவில் கைதான 10 பேரின் விளக்கமறியலும் நீடிப்பு

வாழைச்சேனை நீதவான் நீதிமன்றத்தில், நீதவான் எம்.எச்.எம். பசீல் முன்னிலையில் இந்த வழக்கு, நேற்று (30) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே, மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வாகனங்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால், அடையாளங்களை உறுதிப்படுத்தியதன் பின்னர் சந்தேகநபர்களின் உறவினர்கள், வாகனங்களைக் கொண்டு செல்ல முடியும் என நீதவான் அறிவித்துள்ளார்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 13ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கொரோனா தொற்று அபாயம் காரணமாக சந்தேகநபர்கள் எவரும் நீதவான் முன்னிலையில் நேற்று (30) ஆஜர்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 'வாக்குக்கு பெறுமானம் கிடைக்க வேண்டும்'

தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று (30) நடைபெற்ற சந்திப்புக்குப் பின்னர், ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறுபான்மை கட்சிகள் பரந்துபட்ட உடன்பாட்டை காண்பதற்காக ஒருமித்த சில நிலைப்பாட்டை எடுப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதே நிலைமைப்பாட்டிலேயே நாங்கள் இருக்கின்றோம். இல்லையேல் பிரதிநிதித்துவம் தொடர்பில் கேள்விகள் எழுந்துவிடும்.

"எல்லோருக்கும் நியாயமான, மக்களது ஒவ்வொரு வாக்குக்கும் சரியான பெருமானம் கிடைக்கக் கூடிய அடிப்படையிலான புதிய சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதையே நாம் அனைவரும் விரும்புகிறோம்" என்றார்.

## சாணக் குழிக்குள் விழுந்து ஆண் குழந்தை மரணம்

குழந்தையின் தாய் வேறோர் இடத்தில் தொழில் செய்து வந்த நிலையில், உயிரிழந்த குழந்தையின் மூத்த சகோதரியான 12 வயது சிறுமியும் அவரது தந்தையுமே இக்குழந்தையை பராமரித்து வந்துள்ளனர்.

இந்த நிலையில், குழந்தையை, அவரது மகளிடம் ஒப்படைத்து விட்டு, தோட்டத் தொழிலுக்குச் சென்று மாலை 5. 30 மணியளவில் வீடு திரும்பிய தந்தை, குழந்தையை காணவில்லை எனத் தேடும் போது, வீட்டுத் தோட்டத்தின் கழிவு நீர் குழியிலிருந்து குழந்தை மீட்கப்பட்டுள்ளது.

குழந்தையை மீட்கும் போது, குழந்தை உயிருடன் இருந்ததாகவும், குழந்தை உடனடியாக மஸ்கெலியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்த்தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தில் ஜெயசுந்தரம் சுலக்சன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மஸ்கெலியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## 'கடல்வாழ் உயிரினங்கள் 200 மரணமடைந்துள்ளன'

இதுவரையிலும் மரணமடைந்துள்ளன என்றும் கொழும்பு மேலதிக நீதவான் லொஷானி அபேவிக்ரமவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இது தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களம் நாடளாவிய ரீதியில் 26 நீதிமன்றங்களுக்கு விளக்கமளித்துள்ளது என்பதுடன், பகுப்பாய்வு அறிக்கையை பெற்றுக்கொள்வதற்காக, இரசாயன திணைக்களத்துக்கு அந்த அறிக்கைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் சட்டமா அதிபர், நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

சட்டமா அதிபரின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் மாதவ தென்னக்கோன் மேற்கண்டவாறு நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

தேவையேற்படின், கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்திலும் அறிக்கையிடமுடியும் என்றும் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல், நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

## 'ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டும்'

தனது கட்சியின் தலைமையகத்தில், தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் நேற்று (30) நடைபெற்ற சந்திப்புக்குப் பின்னர், ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஜனநாயகம், முற்போக்கு மற்றும் மக்கள் சக்தி பாதுகாக்கப்படவேண்டும். விகிதாசார முறைமையில் மாற்றம் செய்யப்படுமாயின், அதுவும் இன்னும் மேம்படுத்தக்கூடிய ஜனநாயகம் மற்றும் முற்போக்கை உறுதிப்படுத்தவேண்டும்" என்றும் அவர் கூறினார்.

"மக்களின் சாதாரண விருப்பங்கள், பாராளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது உறுதிப்படுத்தப்படவேண்டும். வாக்கொன்றுக்கு பெறுமதி வேண்டும். இல்லையேல், கட்சிகள் மீண்டும் பழைய நிலைமைக்கே செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். இது, ஜனநாயகத்தையும் முற்போக்கையும் மக்களின் சக்தியையும் கேள்விக்கு உட்படுத்திவிடும்" என்றார்.

## ஆதிவாசிகளின் தலைவர் தடுப்பூசியைப் பெற்றார்

கண்டியில் உள்ள ஆலயமொன்றில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தடுப்பூசி முகாமில், நேற்றுக் காலை ஆதிவாசிகள் மக்கள் குழு, தங்கள் தலைவருடன் சேர்ந்து தடுப்பூசி பெற்றுக்கொண்டது.

ஒகஸ்ட் மாதம் கண்டியில் நடத்தப்படும் வருடாந்த எசல பெரஹெராவின் தொடக்க விழாக்களில் பங்கேற்கவுள்ளதால் அவர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

இதேவேளை, முற்கூட்டிய எச்சரிக்கை நடவடிக்கையாக வருடாந்த எசல பெரஹெராவின் பங்கேற்றும் ஏனையவர்களுக்கு தடுப்பூசி போட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## 'விலங்குகளுக்கு கொரோனா பரிசோதனை'

அதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என வன ஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் சி.பீ இரத்னாயக்க தெரிவித்தார்.

தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையிலுள்ள சிங்கங்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமையால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த அமைச்சர், விலங்குகளுக்கு உரிய சிகிச்சை வழங்காவிடின், அவற்றின் உயிரைப் பாதுகாப்பதில் சிக்கல் ஏற்படும் என்றார்.

அதற்கமைய, ரிதிகம சபாரி மற்றும் பின்னவல சரணாலயத்தில் உள்ள விலங்குகளுக்கு உடனடியாக கொரோனா பரிசோதனையை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

## நிபந்தனைகளுடன் தடை நீக்கம்

இந்த அனுமதி, இன்று (30) முதல் வழங்கப்பட்டுள்ளது என சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் கூறினார். எனினும், முன்னைய அறிவிப்பின் பிரகாரம், இன்று (01) முதல் அமுல்படுத்தப்படும் தடை, எதிர்வரும் 13ஆம் திகதி வரையிலும் தடை அமுல்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இலங்கை தூதரகத்தினால் அனுமதி வழங்கப்பட்ட நிலையங்களில் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறில்லையெனின் குறித்த நாடுகளின் விமான நிறுவனங்கள் அனுமதி வழங்கிய நிலையங்களில் பி.சி.ஆர் பரிசோதனைகள் எடுக்கப்படல் வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து அவர்களை ஹோட்டல்களில் தனிமைப்படுத்த வேண்டும். இலங்கை பிரஜைகளாயின், உரிய சட்டத்திற்கு அமைய வீடுகளில் தனிமைப்படுத்தப்பட வேண்டும் என சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் உபுல் தர்மதாச தெரிவித்தார்.

## சிறுமியை விற்ற விவகாரம்: 17 பேர் கைது; 20 பேருக்கு வலை

"இதேவேளை, பாலியல் செயற்பாடுகளுக்காக சிறுமியைப் பணம் கொடுத்து வாங்கிய மேலும் 20 பேரைக் கைது செய்வதற்கான விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது" என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

மேற்படி சிறுமியை பாலியல் நடவடிக்கைளுக்காக, இணையத்தளம் ஊடாக விற்பனை செய்த பிரதான சந்தேகநபர், ஜூன் 9ஆம் திகதியன்று கைது செய்யப்பட்டார்.

அந்த பிரதான சந்தேகநபர், கல்கிசையில் வாடகை வீடொன்றில் சிறுமியை தடுத்துவைத்து இணையத்தளத்தில் சிறுமியின் நிழற்படத்தை பதிவேற்றி பாலியல் செயற்பாடுகளுக்காக விற்பனை செய்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

35 வயதான பிரதான சந்தேகநபர், மொரட்டுவை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டதை அடுத்து, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## இ.ஒ.கூ தலைவராக ஹட்சன் நியமனம்

கூட்டுத்தாபனத்தில் இணைந்துகொண்டார்.

இதற்கு முன்னர் பல தடவைகள் ஹட்சன் சமரசிங்க, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் பணிப்பாளராகவும் செயற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 'சீனாவின் கீழுள்ள ஒரு மாகாணமாக இலங்கை அரசாங்கம் செயற்படுகிறது'

மேற்குலக நாடுகளுக்கோ விரும்பத்தகாத செயலாகவே உள்ளது" என்றார்.

"வடக்கு, கிழக்கில் சீனர்கள் ஆதிக்கம் செலுத்துவதற்கு இந்த அரசாங்கம் இடமளிக்கின்றது. இது இந்தியாவின் பாதுகாப்பை பாதிக்கும். ஆகையால், இந்தியாவின் பகையை சம்பாதிக்கக்கூடிய நிலைமையை இவ்வரசாங்கம் உருவாக்கி வருகின்றது" என்றார்.

மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று (30) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துரைத்த அவர்,

"மேற்கு நாடுகளிலிருந்து, இலங்கைக்கு பலவிதமான அழுத்தங்கள் வந்துகொண்டிருக்கின்றன. எனினும், சீனாவை முற்றுமுழுதாக நம்பி சீனாவின் வழித்தடத்தில் சீனாவின் ஒரு மாகாணம் போன்று இலங்கை அரசாங்கம் செயற்படுகிறது" என்றார்.

நாட்டுக்குள் சீனர்களின் வருகையும் நாட்டின் பல பாகங்களில் அவர்களால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களும், இந்த நாட்டை படுகுழிக்குள் தள்ளும் செயற்பாடாகவே அமையுமெனத் தெரிவித்த அவர், சீருடை விவகாரத்தில் அரசாங்கத்தின் இரட்டை வேடம் அம்பலமாகிவிட்டது என்றார்.

யாழ். மாநகர சபையின் மேயர் மணிவண்ணன், மாநகர சபையின் எல்லைக்குள் வாகன தரப்பிடக் காவல்களுக்காக விடுதலைப் புலிகளின் சீருடையை ஒத்த சீருடையை அறிமுகப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு, நான்காம் மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

ஆனால், சீன இராணுவத்தின் சீருடையை அணித்த சீனர்களுக்கோ அவர்களை அழைத்துவந்த நிறுவனப் பிரதிநிதிகளுக்கு எதிராகவோ எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எந்தவிதக் கேள்வியும் இல்லை" என்றார்.

ஒட்டுமொத்த நாட்டையே சீனர்களுக்குக் கொடுக்கும் நிலைமை உருவாகியுள்ளது என எச்சரித்த கோவிந்தன் கருணாகரம் எம்.பி. இவ்வாறான செயற்பாடுகள் இந்நாட்டை அழிவுப் பாதைக்கு கொண்டுசெல்லும் என்றார்.

LK Newspapers

## 'கௌதாரிமுனை பண்ணையால் இந்தியாவுக்கும் அச்சுறுத்தல்'

என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

அத்துடன், கௌதாரிமுனை கடலட்டை பண்ணை விவகாரம், ஈழத் தமிழர்களுக்கு மாத்திரம் அல்லாது இந்தியாவுக்குக் கூட பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாகக் காணப்படுகின்றது எனவும், அவர் கூறினார்.

கிளிநொச்சி - கௌதாரிமுனை பகுதியில் உள்ள சீன நிறுவனத்தின் கடலட்டை பண்ணை தொடர்பில் ஆராய்வதற்காக, நேற்று (30), அப்பகுதிக்கு கள விஜயமொன்றை மேற்கொண்ட சிறிதரன் எம்.பி, நிலைமைகளை ஆராய்ந்தப் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே, இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில், தொடர்ந்துரைத்த அவர், யாழ்ப்பாணம் - பாசையூர் மீனவர்களும் கிளிநொச்சி - கௌதாரிமுனை மீனவர்களும் கடலட்டை வளர்ப்புக்காக முன்வைத்த கோரிக்கைகள் மறுக்கப்பட்ட நிலையில், இப்பொழுது சீனர்கள் கடலட்டை வளர்ப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் குற்றஞ்சாட்டினார்.

இயற்கையாகவே கடலில் வளர்கின்ற கடல் அட்டைகளை நிராகரித்துவிட்டு, செயற்கையாக வளர்க்கப்படும் கோழிகளுக்கு வைக்கும் மருந்துகளை போல், கடலட்டைகளுக்கும் வைத்து, அவற்றை விரைவான வளர்ச்சியடைய செய்து, அதனை ஏற்றுமதி செய்யும் நடவடிக்கையில் சீனர்கள் ஈடுபட்டு வருகின்றனர் என்றும், சிறிதரன் சுட்டிக்காட்டினார்.

இவற்றைப் பார்க்கும்போது, சீனாவுக்கு கடலட்டை ஏற்றுமதி செய்யப்படும் செயற்பாடாகத்தான் தெரியும். ஆனால், உண்மையில் இதன் பின்னணியில், பாரியளவு அரசியல் செயற்பாடுகள் உள்ளன.

சீனா தற்பொழுது கால்பதித்துள்ள இடங்கள் அனைத்தும் முக்கியமான கேந்திர நிலையங்களாகவே உள்ளன. இவ்வாறான விடயம் ஈழத் தமிழர்களுக்கு மாத்திரம் அல்லாது இந்தியாவுக்கு கூட பாரிய அச்சுறுத்தலை வழங்குகின்ற செயற்பாடாகக் காணப்படுகின்றது என்றும், சிறிதரன் தெரிவித்தார்.

அத்துடன், இந்தியாவை வலிந்து சண்டைக்கு இழுக்கின்ற மற்றும் இந்தியாவை கண்காணிக்கின்ற செயற்பாடுகளை துரிதமாக சீன அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்த அவர், அதற்கு இலங்கை அரசாங்கமும் ஒத்துழைப்பு வழங்குகிறது என்றும் கூறினார்.

சேதன பசளையை உற்பத்தி செய்வதற்கு

## 'சகல வளங்களையும் கிழக்கு பெற்றிருக்கின்றது'



அ . அச்சுதன்

நாட்டின் பால் உற்பத்தி தேவையை பூர்த்தி செய்வதற்கும், சேதனப் பசளையை உற்பத்தி செய்வதற்கும் அனைத்து வளங்களையும் கிழக்கு மாகாணம் பெற்றிருக்கின்றதென தெரிவித்த கால் நடைவளர்ப்பு, பண்ணைகள் மேம்பாடு,பால் மற்றும் சார் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் டி.பி. ஹேரத், முட்டை, இறைச்சி ஆகியவற்றின் உற்பத்தியில் நாடு தன்னிறைவு அடைந்திருக்கிறது என்றார்.

"பால் உற்பத்தியும் நிலையான அபிவிருத்தியும்" எனும் தொனிப்பொருளில், நேற்று (30) திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

திருகோணமலை மாவட்ட செயலாளர் சமன் பாண்டிக் கோரளயின் வழிகாட்டலின் கீழ், கிழக்கு மாகாண ஆளுநர் அனுராத யஹம்பத் தலைமையில் இந்த கலந்துரையாடல் நடைபெற்றது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலோடு

# ‘ராஜபக்ஷர்கள் யுகம் முடிவுக்கு வரும்’



அடுத்த ஜனாதிபதித் தேர்தலோடு ராஜபக்ஷர்கள் யுகம் இந்நாட்டில் முடிவுக்குக் கொண்டுவரப்படும் எனத் தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு இணையான கட்சியொன்று விரைவில் உருவாக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

கொழும்பில் வைத்து நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது தொடர்ந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம, நாடு தற்போது முகங்கொடுத்துள்ள நெருக்கடி நிலைமைகளில் இருந்து, பசில் ராஜபக்ஷவால் நாட்டை மீட்க முடியாது. பசிலால் மட்டுமல்ல இந்த அரசாங்கத்திலுள்ள ஏனையோராலும் அதனைச் செய்ய முடியாது என்றார்.

கடந்த அரசாங்கத்தில் பசில் இருந்தார். அப்போது அவர் செய்தது என்ன? ராஜபக்ஷர்களுக்கு அரசாங்கத்தில் மற்றொரு பதவியை வழங்கும் செயற்பாடே இது. முழு நாட்டையும் ராஜபக்ஷர்களுக்கு வழங்கும் செயற்பாடு எனவும் சாடினார்.

மஹிந்த ராஜபக்ஷவை தவிர்த்து ஏனைய ராஜபக்ஷர்கள் அனைவரும் அமெரிக்காவைச் சேர்ந்தவர்களே. பசில், சிராந்தி, புஸ்பா அல்லது ராஜபக்ஷர்களின் குடும்பத்தில் தற்போது பிறந்திருக்கும் குழந்தைகள் அரசியலுக்கு வந்தாலும், நாட்டை நாசமாக்குவதைத் தவிர்த்து அவர்களால் வேறு எதையும் செய்ய முடியாது எனவும் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு இணையான கட்சி ஒன்றை அமைப்போம். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதியாக இருக்கும்போதே எதையும் செய்யவில்லை. அமைச்சர் பதவிகளைக் கொண்டா எதையும் செய்துவிடப் போகிறார்? அவர் வெறும் பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதே நல்லது எனவும் தெரிவித்தார்.

மூன்றாவது அலைக்கு அரசாங்கம்

# ‘வெற்றிகரமாக முகங்கொடுக்கிறது’



கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக 2020ஆம் ஆண்டு முதல் இதுவரை அரசாங்கம் 262 பில்லியன் ரூபாயைச் செலவிட்டுள்ளதாகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரதமர் தலைமையில் நேற்று (30) அலரி மாளிகையில் நடைபெற்ற நிதி அமைச்சின் முன்னேற்ற ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சர் என்ற வகையில் அமைச்சுக்கு உரிய அனைத்து நிறுவனங்களினதும் தற்போதைய நிலை, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பில் பிரதமர் இதன்போது கவனம் செலுத்தியுள்ளார்.


நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகலவால் இதன்போது ‘சவாலுக்கு மத்தியில் சுபீட்சத்தை நோக்கி’ என்ற நிதி அமைச்சின் முன்னேற்றம், எதிர்கால நோக்கு முன்வைக்கப்பட்டது.

மேலும், கொரோனா வைரஸின் இரண்டாவது, மூன்றாவது அலைகளை அரசாங்கம் வெற்றிகரமாக கட்டுப்படுத்தி உள்ளதாகவும் தெரிவித்த நிதி அமைச்சின் செயலாளர், மூன்றாது அலைக்கு வெற்றிகரமாக அரசாங்கம் முகங்கொடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

# ‘முக்கிய சாட்சியான ஷானியை பாதுகாக்க வேண்டும்’

பாதீஸ்வரன்

ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டமை உள்ளிட்ட பல்வேறு வழக்கு விசாரணைகளில் ஷானி அபேசேகர முக்கிய சாட்சியாக இருப்பதால், அவரது பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டுமென இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.



சி.ஐ.டியின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர, அவரது குடும்பத்தினருக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதாக ஷானி அபேசேகரவால் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதம் தொடர்பில், கவனம் செலுத்த வேண்டுமென, குற்றங்கள் மற்றும் சாட்சிகளில் பாதிக்கப்பட்டோருக்கான பாதுகாப்பு தேசிய ஆணையத்துக்கு இளம் ஊடகவியலாளர் சங்கம் கடிதமொன்றை எழுதியுள்ளது.

ஊடகவியலாளர்கள் காணாமலாக்கப்பட்டமை, துன்புறுத்தப் பட்டமை, கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டிருந்த ஷானி அபேசேகரவுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டால், மேற்குறித்த சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளில் பெரும் பாதிப்பு ஏற்படுமெனவும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது.

ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டமை உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் தொடர்பில் ஷானி அபேசேகரவால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை மூடிமறைப்பதற்கே, சி.ஐ.டியின் பணிப்பாளர் பதவியிலிருந்து ஷானி நீக்கப்பட்டதாகத் தெரிவித்து, இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கடிதமொன்றை எழுதியிருந்தது.

அரிசி விலையைக் கட்டுப்படுத்துவதில்

# ‘அரசாங்கத்தின் தோல்வியை சரி செய்வோம்’



அரிசி விலையைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருந்த தோல்வியை, சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் இருந்த அரிசி கையிருப்பு தீர்ந்துள்ள நிலையில், அரிசி ஆலை உரிமையாளர்கள் 80 - 90 ரூபாய்க்கு அரிசி கிலோ கிராம் ஒன்றைக் கொள்வனவு செய்து, அவற்றை 240 ரூபாய்க்கு, அதிக விலைக்கு விற்பனை செய்து இலாபத்தைப் பெற்று வருவதாகவும் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாட்டில் தற்போதுள்ள சட்டத்தின்படி, அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்வோருக்கு 2 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதிக்கப்படும். அரிசி ஆலை உரிமையாளர்களால் இந்தத் தொகையை இலகுவாக செலுத்த முடியும். எனவே விவசாய அமைச்சர் என்ற வகையில், இந்த அபராதத் தொகையை ஒரு இலட்ச ரூபாயாக அதிகரிக்க யோசனை ஒன்றைத் தான் முன்வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரிசியை இறக்குமதி செய்வதற்கு, எந்தவொரு தரப்புக்கும் இதுவரையில் இறக்குமதி உரிமம் வழங்கப்படவில்லை. அரிசியை இறக்குமதி செய்ய வேண்டுமென வர்த்தக அமைச்சர் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளபோதிலும், அது தொடர்பில் எந்தவிதமான தீர்மானங்களும் இதுவரையில் எடுக்கப்படவில்லை. இதேவேளை, அரிசியை ஏற்றுமதி செய்யுமளவுக்குத் தேவையான அரிசி நாட்டில் காணப்படுகிறது. ஆனாலும் அவற்றைப் பதுக்கி வைத்திருப்பதாகவும் அமைச்சர் மஹிந்தானந்த தெரிவித்தார்.

ராஜபக்ஷ குடும்பத்திடம்

# அதிகாரங்களை குவிப்பதா?



ராஜபக்ஷர்கள் குடும்பத்திடம் அனைத்து அதிகாரங்களையும் வழங்குவது தொடர்பில், நாட்டு மக்கள் சிந்திக்க வேண்டுமெனத் தெரிவிக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க, நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்கு பசிலே காரணம். அவரால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது எனவும் தெரிவித்தார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த அநுரகுமார திஸாநாயக்க, பொருளாதார புத்தெழுச்சி, வறுமை ஒழிப்பு ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷவால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியுமெனக் கூறுகிறார்கள். இதனூடாக மறைமுகமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் தோல்வியடைந்துவிட்டார்கள் என்றே கூறுகிறார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் நாட்டின் பொருளாதாரம் பற்றி எதுவும் தெரியாது. பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அவர்களால் முடியாதென்பதே இதனூடாக விளங்குவதாகவும் தெரிவித்த அநுர, இது உண்மை. ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றி எதுவும் தெரியாது என்றார்.

பசில் ராஜபக்ஷவுக்குப் பின்னர் மற்றொரு ராஜபக்ஷவால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியுமெனக் கூறுவார்கள். உண்மையில் நாட்டைக் கட்டியெழுப்புவது என்பது தனிநபர் கையிலோ அல்லது மெஜிக்காரர்கள் கையிலோ இல்லை எனவும் தெரிவித்தார்.

பசில் ராஜபக்ஷவே தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு காரணமாக இருந்தவர். 2020ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பொருளாதார புத்தெழுச்சி, வறுமை ஒழிப்பு ஜனாதிபதி செயலணியின் தலைவராக பசில் நியமிக்கப்பட்டார். எனவே நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைக்கும் நாட்டு மக்கள் முகங்கொடுக்கும் பொருளாதாரப் பிரச்சினைக்கும் பசிலே காரணம் எனவும் தெரிவித்தார்.



கடற்றொழிலாளர்களுக்கு

# உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

தீப்பற்றி எரிந்த ‘எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல்’ விபத்தின் காரணமாக, தொழில் இழந்த கடற்றொழிலாளர்களுக்கு, தொழில் உபகரணங்களை வழங்குவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதனடிப்படையில், தொழில் உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடற்றொழில் அமைச்சில் நடைபெற்ற இந்நிகழ்வில், கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர, கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்நாயக்கா, அமைச்சு அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# ‘எந்தவோர் அபிவிருத்தியையும் நிறுத்தப்போவதில்லை’

நாட்டில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் எதையும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிறுத்தப்போவதில்லை என தெரிவித்த அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, அபிவிருத்தித் திட்டங்களை விரைவாக நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதுதொடர்பில் மேலும் கருத்துரைத்த அவர், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாட்டை அபிவிருத்திச் செய்யும் வேலைத்திட்டங்களை நிறுத்தப்போவதில்லை. இந்த வேலைத்திட்டங்களை தற்காலிகமாக நிறுத்துவதைவிட, விரைவாக செய்து முடிக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. கடந்த 5 வருடங்களில் நாட்டில் எந்தவொரு அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

# ஆசிரியர்களின் பணம் முறைகேடாக பயன்பாடு

## கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு முறைப்பாடு

கல்வி ஊழியர்களின் கூட்டுறவு சங்கப் பணத்தை முறைகேடாகப் பயன்படுத்தியமைக்கு, இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

வரையறுக்கப்பட்ட கல்வி ஊழியர்களின் கூட்டுறவு மற்றும் சிக்கன, கடனுதவிச் சங்கம் (EDCS) உறுப்பினர்களின் பணத்தை முறைகேடாக பயன்படுத்தியமை தொடர்பாக, இலங்கை ஆசிரியர் சேவை சங்கம், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு முறைப்பாடு செய்துள்ளதாகச் சங்கத்தின் உப தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

எந்த வகையிலும் தமது சேவையைச் சங்கத்துக்கு வழங்காத வெளிநபர்களுக்கு மாதாந்த சம்பளம் வழங்கப்பட்டமை தொடர்பாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்துக்கு முறைப்பாடொன்று கிடைத்துள்ளது.



சங்கத்தின் தற்போதைய நிர்வாகத்தால், தமது அரசியல் நண்பர்கள் 300 க்கு அதிகமானோருக்கு நாள் சம்பள அடிப்படையில் சங்கத்தின் வெவ்வேறுபட்ட பிரிவுகளுக்கும், சம்பளம், அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கொரோனா தொற்றுநோய் காரணமாக அனைத்து காரியாலய நடவடிக்கைகளும் கட்டுப்படுத்தல் காரணமாக மேற்குறிப்பிட்ட பணியாளர்கள் சேவைக்கு அழைக்கப்படாத சந்தர்ப்பத்திலும் அவர்கள் சேவைக்கு வருகை தந்ததாகத் தெரிவித்து தொடர்ந்து சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதம் ரூபாய் 80,00,000 இக்கு கிட்டிய பணமும் மே மாதம் ரூபா 78,00,000 கிட்டிய பணமும், ஜூன் மாதம் 78,00,000 கிட்டிய பணமுமாக சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் நிர்வாகத்தால் உறுப்பினர்களின் பணம் தோன்றித்தனமாக, தனது அரசியல் நண்பர்களுக்கு நாள் சம்பளமாக அநீதியான விதத்தில் வழங்கப்பட்டுள்ளது.

சங்கத்தில் அங்கத்தவர்களின் பணம் முறைகேடான விதத்தில் பயன்படுத்துவது தொடர்பாக தாங்கள் முழுமையான கவனம் செலுத்த வேண்டும் என்றும், முழுமையான விசாரணையை மேற்கொள்ள வேண்டும் எனவும் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளது.



குடிநீர் சுத்திகரிப்பு

# இயந்திரங்களை உள்நாட்டில் தயாரிக்க நடவடிக்கை


மக்களுக்கு குடிநீரை வழங்கும்போது, ஆரோக்கியமான மற்றும் சுத்தமான குடிநீரை வழங்குவதை, உறுதிசெய்வதாகத் தெரிவிக்கும் நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, சுத்திகரிப்பு இயந்திரங்களை உள்நாட்டில் தயாரிக்கத் தேவையான நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நீர் வழங்கள் வடிகாலமைப்பு அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்துக்குச் சொந்தமான கொலன்னாவ தொழிற்சாலையின் ஊடாக நாட்டுக்குத் தேவையான அனைத்து சுத்திகரிப்பு இயந்திரங்களையும் உள்நாட்டில் உற்பத்தி செய்ய தேவையான நடவடிக்கைகளை ஏற்கெனவே ஆரம்பித்துள்ளோம்.

ஏற்கெனவே, இத்திட்டங்கள் தொடர்பில், இந்த நேரத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த முடியாது. ஆனால், எதிர்காலத்தில் அவற்றை இரத்துச் செய்து, உள்நாட்டு நிதியங்களுக்கு மாற்ற முடியும். காரணம், டொலர்கள் மூலம் கடன்களை மீள செலுத்துவது எங்களுக்கு கடினமானது. கடன்களை ரூபாயின் மூலம் மீளச் செலுத்துவது எளிதானது. இது இந்த நாட்டுக்கும் நல்லது; நமது பொருளாதாரத்துக்கும் வலிமையானது.

எதிர்கால ஒப்பந்தங்கள் அனைத்தும், உள்ளூர் ஒப்பந்தக்காரர்கள் மூலம் செய்யப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கமாகும். நீர் வழங்கல் சபையில் உள்ள உள்நாட்டு பொறியியலாளர்களால் பல்வேறு நீர் வழங்கல் திட்டங்களைத் தயாரித்த பின்னர், உள்ளூர் ஒப்பந்தக்காரர்களால் அவற்றை நிறைவேற்ற அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் தெரிவித்தார்.



# மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை பாதுகாக்க நடவடிக்கை

மாற்றுத்திறனாளிகள் எதிர்நோக்கும் சவால்கள், அவர்களின் உரிமைகளை, சட்டக்கோவையின் கீழ் பலப்படுத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்ணான்டோ புள்ளே தலைமையில் நடைபெற்றுள்ளது.

பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தால் முன்னெடுக்கப்பட்ட இக்கலந்துரையாடல் ஒன்லைன் ஊடாக நடைபெற்றுள்ளது.

> “ மாற்றுத் திறனாளிகளை இனிமேல் ஊனமுற்றவர்கள் என அழைக்கக்கூடாது எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது

கொரோனா வைரஸ் நிலைமைகளுக்கு மத்தியில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் தீர்மானங்கள் மாற்றுத்திறனாளிகளின் தொடர்பாடலுக்கு உட்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் தொடர்பான சமூகத்தின் அக்கறை மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்படுவதாகவும், இதற்காக ஒன்றிணைந்து செயற்படுவது அனைவரதும் பொறுப்பாகும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் இதன்போது சுட்டிக்காட்டினார். இதேவேளை மாற்றுத் திறனாளிகளை இனிமேல் ஊனமுற்றவர்கள் என அழைக்கக்கூடாது எனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டுள்ளது.

படையினர் முன்னிற்பதால் தான்

# ‘மக்களுக்கு பாதுகாப்பு’

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்



நாட்டின் பாதுகாப்புக்குப் படையினர் முன்னிற்பதால் தான் மக்களும் நாட்டின் வளங்களும் பாதுகாக்கப்படுகின்றன என, இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மொஹமட் சாட் கட்டாக் தெரிவித்தார்.

வடக்குக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள உயர்ஸ்தானிகர், கிளிநொச்சிக்கு, நேற்று முன்தினம் (29) மாலை சென்று, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 30 குடும்பங்களுக்கான உலருணவுப் பொருள்களை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், “இலங்கையும் பாகிஸ்தானும் நீண்ட காலமாக நட்பு நாடுகளாகவும் பொருளாதார உதவிகளை வழங்குகின்ற நாடுகளாகவும், பாதுகாப்பு ரீதியாகவும் ஏனைய உதவிகளை வழங்கும் நாடுகளாகவும் இருந்து வருகின்றன” என்றார்.

தீவிரவாதம் பற்றிப் பேசுகின்ற போது, முதலாவதாகவும் கடைசியாகவும் பாதுகாப்புப் பற்றி பேசுவதாகக் காணப்படுவதாகத் தெரிவித்த அவர், இதற்கு இலங்கை தான் முன்னுதாரணமாகுமெனவும் கூறினார்.

நாட்டின் பாதுகாப்புக்குப் பாதுகாப்புப் படைகள் தான் முன்னிற்கின்றன எனத் தெரிவித்த அவர், படையினர் முன்னிற்பதால் தான் மக்களும் நாட்டின் வளங்களும் பாதுகாக்கப்படுகின்றன என்றும் கூறினார்.

“இலங்கை பாதுகாப்புப் படைகள் நாட்டைப் பாதுகாக்கும் சிறப்பை உடையவர்களாக காணப்படுகின்றனர். அத்துடன், தலைமைத்துவம் பற்றிப் பேசும்போது, இலங்கையும் பாகிஸ்தானும் மிகவும் நெருக்கமான தலைமைத்துவத்தைக் கொண்ட நாடாகவே நான் கருதுகின்றேன்” என்றும் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் கூறினார்.

24 மணித்தியாலங்களில் 3 கொவிட் மரணங்கள்;

# மருதமுனைக்கு சிவப்பு எச்சரிக்கை

■ வி.ரி.சகாதேவராஜா, பாறுக் ஷிஹான், எம்.ஏ.றமீஸ், எம்.எஸ்.எம்.ஹனீபா, ஏ.எல்.எம். ஷினாஸ்

மருதமுனையை சிவப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தி உள்ளதாக, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் தெரிவித்தார்.

கல்முனைப் பிராந்தியத்தில் கடந்த 24 மணித்தியாலங்களில் ஐந்து கொவிட் -19 மரணங்கள் சம்பவித்திருக்கின்றன என்றும் அவற்றில் மூன்று மருதமுனையில் இடம்பெற்றுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “தற்போது கொவிட்-19 தொற்று அதிகரித்து வருகின்றது. தொடர்ச்சியாக எமது சுகாதாரத் துறையினரின் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றன.

“கல்முனை சுகாதார சேவைகள் பணிமனையில் நாள் ஒன்றில் நூற்றுக்கு அதிகமான பி.சி. ஆர். அன்டிஜன் பரிசோதனைகளை மேற்கொள்வதென நாம் தீர்மானித்துள்ளோம்.



“மருதமுனையின் இரண்டு வீதிகளில் அதிக பாதிப்புகள் காணப்படுகின்றன. இருமல், காய்ச்சல் ஏதாவது அறிகுறி இருந்தால் தாமாக முன்வந்து பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு, பொது அறிவித்தல் விடுத்துள்ளோம்.

“பரிசோதனை முடிவுகளைக் கொண்டு மருதமுனைக் கிராமத்தை முடக்குவதா என்பது தொடர்பாகவும் எதிர்கால நடவடிக்கை தொடர்பாகவும் முடிவெடுக்கப்படும்.

“உயர் அதிகாரிகள் உட்பட பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்காமையும் இவ்வாறு கொவிட்- 19 தாக்கம் மருதமுனையில் அதிகரிப்பதற்கு ஒரு காரணமாகும்.

“இந்தச் சவாலான நிலைமையை மனதிற்கொண்டு, ஒவ்வொருவரும் அவதானமாகவும் பொறுப்புடனும் செயற்படுங்கள்” என்றார்.

சுகாதார நடைமுறைகளை

## ‘பஸ்களில் இறுக்கமாக கடைப்பிடிக்கவும்’

■ எம்.எஸ்.எம். ஹனீபா



கிழக்கு மாகாணத்தில் பொதுப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பஸ்களின் ஆசனங்களுக்கேற்ப பிரயாணிகள் ஏற்றப்பட வேண்டுமெனவும், பிரயாணிகள் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்குமாறும், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக், நேற்று (30) தெரிவித்தார்.

நாட்டில் தற்போது கொரோனா தொற்றுத் தாக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் பொதுப் போக்குவரத்து பஸ்களில் பயணிக்கும் பிரயாணிகள் சமூக இடைவெளியைப் பேணி, முகக்கவசம் அணிந்து செல்ல வேண்டும்.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்ற பஸ்களை பரிசோதிப்பதற்கு பொலிஸாரும் சுகாதார அதிகாரிகளும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

சுகாதார நடைமுறைகளைப் பேணாத பஸ்கள் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் அதன் சாரதிகள், நடத்துநர்களுக்கு எதிராக நீதிமன்றினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 19 நாள்களின் பின்னர் 3 பகுதிகள் விடுவிப்பு

■ எச்.எம்.எம்.பர்ஸான்



கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்கள் சில விடுவிக்கப்பட்டுள்ளன.

கடந்த 11ஆம் திகதி, மீராவோடை கிழக்கு, மீராவோடை மேற்கு, மாஞ்சோலை ஆகிய மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் முடக்கப்பட்டு இருந்தன.

இந்த மூன்று பிரதேசங்களும் 19 நாள்களின் பின்னர் இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியை விடுவிப்பு செய்ய உதவிய மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் க.கருணாகரன், இங்கு கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர், பொலிஸார் ஆகியோர்களுக்கு ஓட்டமாவடி பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எம்.நௌபர் தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

## இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், வீரசிங்க மண்டபத்தில், இன்று (01) இரத்ததான முகாம் நடைபெறவுள்ளது.


தேசிய இரத்த மத்திய நிலையத்தின் வேண்டுகோளுக்கிணங்க, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் இந்த இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் முகாமில் பங்கேற்போர் தமது பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம், தொலைப்பேசி இலக்கம் என்பவற்றை 077-0399-199 எனும் அலைபேசி இலக்கத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மன்னாரில் உரிய நேரத்தில்

## ‘நிவாரணப் பொருள்கள் வழங்கப்படுவதில்லை’

■ எஸ்.றொஜேரியன் லெம்பேட்



மன்னார் மாவட்டத்தில், கொரோனா காரணமாக சுய தனிமைப்படுத்தப்படுகின்ற குடும்பங்களுக்கு, அரசாங்கத்தால் வழங்கப்படும் நிவாரணப் பொருள்கள் உரிய நேரத்தில், உரிய முறையில் கிடைப்பதில்லையென, மன்னார் நகர சபை உறுப்பினர் திருமதி சிறிதரன் அந்தோனியம்மா, நேற்று (30) குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக தொடர்ந்துரைத்த அவர், அரசாங்கத்தால் தனிமைபடுத்தப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவுப் பொருள்கள் கிடைப்பதாக நினைத்து, அரச சார்பற்ற நிறுவனங்களும் பொது அமைப்புகளும் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களைக் கருத்தில் கொள்வதில்லை என்றார்.

இதன் காரணமாக, தனிமைப்படுத்தப்பட்ட எத்தனையோ குடும்பங்கள் பட்டியால் வாடி வருகின்றன எனத் தெரிவித்த அவர், தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு பத்தாயிரம் ரூபாய் பெறுமதியான உலருணவு பொருள்கள் வழங்குவதாக செய்திகள் வெளிவந்தாலும், மன்னார் மாவட்டத்தில் ஐயாயிரம் ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொருள்கள் மாத்திரமே வழங்கப்படுகின்றன என்றும் கூறினார்.

அதுவும் தனிமைப்படுத்தப்பட்டு பத்து நாள்கள் கடந்த பின்னரே, உலருணவுப் பொருள்களை வழங்குகின்றனர் என்றும், அவர் சாடினார்.

எனவே, மன்னார் மாவட்டத்தில் உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டுமென்றும், திருமதி சிறிதரன் அந்தோனியம்மா, கோரிக்கை விடுத்தார்.



இரு வீடுகளுக்குள்

## வாள்வெட்டு குழு அட்டகாசம்

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், கொக்குவில் மேற்குப் பகுதியில் உள்ள இரு வீடுகள் மீது, நேற்று முன்தினம் (29) இரவு, தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஆறு மோட்டார் சைக்கிள்களில் வாள், இரும்புக் கம்பி, கூரிய ஆயுதங்களுடன் வந்திறங்கிய ஒன்பது பேர் கொண்ட கும்பலொன்று, இரண்டு வீடுகளுக்குள் புகுந்து, அங்கு இருந்த பெறுமதியான பொருள்களை அடித்து சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## சட்டவிரோத மணல் அகழ்வு

ஐவர் கைது

■ ஏ.எம்.ஏ.பரீட்



கிண்ணியா பொலிஸ் பிரிவின் மணலாறு, கண்டல் காடு ஆகிய பகுதிகளில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட ஐவர், நேற்று (30) அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

நான்கு உழவு இயந்திரங்கள், டிப்பர் ரக வாகனம் ஒன்றில் இவர்கள் சட்டவிரோதமாக மணல் ஏற்றிக் கொண்டிருந்த போது, பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் கைது செய்யப்பட்டனர் என கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களையும் கைப்பற்றப்பட்ட உழவு இயந்திரங்கள், டிப்பர் ரக வாகனத்தையும் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் பாரப்படுத்த கிண்ணியா பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிண்ணியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ். மாணவர்களுக்கு

## ‘புலமைப் பரிசில் வழங்கப்படும்’

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

■ எஸ்.நிதர்ஷன், டி.விதித்தா



யாழ். மாவட்ட மாணவர்கள், பாகிஸ்தானில் உயர் கல்வி கற்பதற்கான புலமைப் பரிசில் திட்டங்களை வழங்குவதாக, இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் தெரிவித்ததாக, யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அங்கஜன் இராமநாதன் கூறினார்.

வடக்குக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மொஹமட் சாட் கட்டாக், நேற்று (30) யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு வருகை தந்தார்.

இதன்போது, யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அங்கஜன் இராமநாதனை பாகிஸ்தான் தூதுவர் மொஹமட் சாட் கட்டாக் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதேவேளை, யாழ். மாவட்டத்தின் தற்போதைய அபிவிருத்தி, சமகால நிலைமைகள் தொடர்பில், பாகிஸ்தான் தூதருக்கு காணொளி முறையில் மாவட்டச் செயலாளர், திணைக்களத் தலைவர்களால் விளக்கமளிக்கப்பட்டன.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே, அங்கஜன் இராமநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், யாழ்ப்பாண மக்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான உதவிகளைச் செய்வதாக பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் உறுதியளித்தார் என்றும் கூறினார்.



தலைமன்னாரில்

## பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுப்பு

■ எஸ்.றொஜேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில் முடக்கப்பட்டுள்ள தலைமன்னார் பியர் மேற்கு, பியர் கிழக்கு ஆகிய இரு கிராம அலுவலர் பிரிவுகளிலும், நேற்றும் (30) நேற்று முன்தினமும் (29), பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமையன்று (25), தலைமன்னார் பியர் பகுதியில், 62 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில், குறித்த இரு கிராம அலுவலகர் பிரிவுகளும் மறு அறிவித்தல் வரை முடக்கப்பட்டுள்ளன.

சேதனப் பசளைகளில்

## பாடசாலைகளில் தோட்டங்கள்

■ ஹஸ்பர் ஏ ஹலீம், ஏ.எம்.ஏ.பரீட்



பாடசாலைகள் ஆரம்பித்தவுடன் கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் சேதனப் பசளை மூலமான மாதிரித் தோட்டம் அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு, கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத், அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று (30) நடைபெற்ற கூட்டத்தின் போதே, அவர் இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்

இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதைத் தடுக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த முடிவை உண்மையாக்குவதற்கு இது செயற்படுத்தப்பட வேண்டும் என்றும் ஆளுநர் கூறியுள்ளார்.

இந்தப் புதிய விடயத்தை மாணவர்களின் இதயங்களில் அறிமுகப்படுத்துவதன் மூலம், நாட்டின் எதிர்கால தலைமுறை நிச்சயமாக நிலையான விவசாயத்தை நோக்கி நகரும் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

இது குறித்து அனைத்து அதிபர்களுக்கும் தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் சேதனப் பசளை செய்கை விவசாயம் தொடர்பில் மாணவர்களுக்கு கற்பிக்க பாடசாலை பாடத்திட்டத்தில் வாரத்துக்கு ஒரு நேரமாவது சேர்க்கப்பட வேண்டும் என்றும் ஆளுநர் மேலும் அறிவுறுத்தியுள்ளார்.

> சேதனப் பசளை செய்கை விவசாயம் தொடர்பில் மாணவர்களுக்கு கற்பிக்க பாடசாலை பாடத்திட்டத்தில் வாரத்துக்கு ஒரு நேரமாவது சேர்க்கப்பட வேண்டும்

‘நஞ்சற்ற நாடு’

## செயற்றிட்டத்தின் கீழ் நிலக்கடலைச் செய்கை



■ ரீ.எல்.ஜவ்பர்கான்

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமான ‘நஞ்சற்ற நாடு’ எனும் தொனிபொருளில், சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி, மரக்கறி மற்றும் விவசாய உற்பத்திகளை, மட்டக்களப்பு மாவட்ட மேட்டு நிலப் பயிர்ச் செய்கைகளில் மேற்கொள்ளப்பட்டுவருதாக மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ், மட்டக்களப்பு மாவட்டத்தில் 1,580 ஏக்கரில் நிலக்கடலைச் செய்கை இம்முறை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, பெரும்பாலான விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் நிலக்கடலை விதைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தின் பிரதான மேட்டு நிலப் பயிர்ச் செய்கையான நிலக்கடலை உற்பத்தியில் பெருமளவிலான விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ‘மாறுங்கள் இல்லையேல் மாற்றப்படுவீர்கள்’

## பெருந்தோட்ட நிர்வாகங்களுக்கு வடிவேல் எம்.பி எச்சரிக்கை

“பெருந்தோட்ட நிர்வாகங்கள் மாற வேண்டும்; இல்லையேல் மாற்றப்படுவீர்கள்” என எச்சரிக்கை விடுத்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ், தொழிலாளர்கள் மீது பெருந்தோட்ட நிறுவனங்கள் தொடர்ந்தும் மனிதாபிமானற்ற விதத்தில் நடந்துக்கொள்வதாக குற்றஞ்சுமத்தினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (30) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், “கல்வி, அபிவிருத்தி, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு



பெருந்தோட்ட மக்கள் முகங்கொடுத்து வரும் நிலையில், தற்போது தோட்டக் கம்பனிகளும் மக்களிடம் மனிதாபிமானமற்ற ரீதியில் செயற்பட்டு வருகின்றன. நாளொன்றுக்கு 18 கிலோ கிராம் கொழுந்தைப் பறித்தால் மாத்திரமே 1,000 ரூபாய் அடிப்படை சம்பளம் வழங்கப்படுமென தோட்ட நிர்வாகங்கள் அழுத்தம் கொடுப்பதால் பல தோட்டங்களில் எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கமைய நேற்று (30) கொட்டியாகலை தோட்டத்திலும் சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தப் போக்கிலிருந்து பெருந்தோட்ட கம்பனிகள் மாற வேண்டும்” எனத் தெரிவித்த அவர், பெருந்தோட்ட மக்களும் இந்த நாட்டின் பிரஜைகளே. எனவே, அவர்களுடைய பிரச்சினைகளை அரசாங்கம் கண்டும் காணாமல் இருப்பது ஏன் எனக் கேள்வி எழுப்பினார்.

மன்றாசி சதொசவில்

# பொருள்களுக்கு தட்டுப்பாடு

■ துவாரகஷான்

சதொச விற்பனை நிலையங்கள் மற்றும் கூட்டுறவு நிலையங்களில் சாதாரண விலைக்குப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம் என அரசாங்கம் அறிவித்தாலும் மலையகத்தின் சில நகரங்களில் கூட்டுறவு நிலையங்களையோ சதொச நிலையங்களையோ காண்பது மிகவும் அரிதாகவே உள்ளது.

அக்கரப்பத்தனை, டயகம, மன்றாசி, ஹோல்புறுக் ஆகிய நகரங்களை அண்டி, அறுபதாயிரத்துக்கும் அதிகமாக தொழிலாளர்கள் வாழ்ந்து வரும் நிலையில், குறிப்பிட்ட நகரங்களில் சதொச விற்பனை நிலையமொன்று இன்மையால் மக்கள் பெரிதும் சிரமத்தை எதிர்நோக்கினர்.

இந்நிலையில், 2 வருடங்களுக்கு முன்னர் மன்றாசி நகரில் சதொச





நிலையம் ஒன்று திறக்கப்பட்டாலும் அங்கு பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் தமக்குத் தேவையான பொருள்கைளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் நுகர்வோர் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கும் மக்கள், இது குறித்து உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இராகலையில்

# ஒரே நாளில் இருவர் மரணம்

■ ஆ.ரமேஸ்

இராகலை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட சென்-லெனாட்ஸ், கணிக்கா ஆகிய தோட்டங்களில் நேற்று முன்தினம் (29) இரண்டு கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளதென, பிரதேசத்துக்குப் பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகர் லஹிரு விக்கிரமரத்ன தெரிவித்தார்.

இதற்கமைய, சென் லெனாட்ஸ் தோட்டத்தில் 64 வயது பெண், நுவரெலியா வைத்தியசாலையில் மாரடைப்புக் காரணமாக அனுமதிக்கப்பட்ட நிலையில், 28ஆம் திகதி உயிரிழந்துள்ளார். இதன்போது அவருக்கு செய்யப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேபோல, கணிக்கா தோட்டத்தில் 63 வயதுடைய ஆண் ஒருவரும் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, இராகலை பொதுச் சுகாதார பிரிவுகளில் இதுவரை 512 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், ஒன்பது மரணங்களும் பதிவாகியுள்ளதென அவர் மேலும் தெரிவித்தார்.

கந்தப்பளை விவசாயிகள்

# பசளை கோரிப் போராட்டம்

■ ஆ.ரமேஸ்

தமது மரக்கறி உற்பத்திகளுக்கு பசளை இன்மையை சுட்டிக்காட்டி, கந்தப்பளை பிரதேச விவசாயிகள் ஒன்றிணைந்து, கந்தப்பளை, மஹிந்த வித்தியாலயத்துக்கு முன்பாக நேற்று (30) காலை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டமானது, கந்தப்பளை ஸ்ரீ ஜிநேன்ராராமய விஹாராதிபதி தம்பகொள்ளே சோமாநந்த தேரர் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் சுமார் 300 பேர் கலந்துகொண்டனர் என்பதுடன், அவர்கள் பல்வேறு பதாகைகளையும் ஏந்திப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

இதன்போது, “அசேதனப் பசளையை விவசாயிகளுக்குத் தடையின்றி வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்”, “தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதியை மறந்துவிட வேண்டாம்” என அவர்கள் கோஷங்கள் எழுப்பினர்.

மேலும், விவசாயிகளின் கையொப்பத்துடனான மனுவொன்று ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுமென போராட்டத்தை வழி நடத்திய தேரர் தெரிவித்தார்.







# கண்காணிப்பு...

வெலிமட பிரதேச சபையால், பிரதேசத்தில் சேகரிக்கப்படும் கழிவுகளைப் பயன்படுத்தி, ஆரம்பிக்கப்பட்ட சேதன பசளை தயாரிப்புத் திட்டத்தை, ஊவா மாகாண ஆளுநர் ஏ.எம்.ஜே. முஸம்மில், நேற்று முன்தினம் (29) கண்காணித்தார். (சுமணசிறி குணதிலக)



# காகங்களின் படையெடுப்பு

■ க. மஹிந்தகுமார்

பலாங்கொடை நகரில் சில நாள்களாகவே மாலை வேளைகளில் அதிகமான காகங்கள் படையெடுக்கின்றன.

இதனால் வர்த்தக நிலையங்கள் மற்றும் நிறுத்தப்படும் வாகனங்கள் காகங்களின் எச்சங்களால் அசுத்தமடைவதுடன், காகங்களின் இரைச்சலால், நகருக்கு வருவோரும் அசௌகரியத்துக்கு உள்ளாவதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

# ‘சேதன பசளை உற்பத்தியாளர்களை அரசாங்கம் ஊக்கப்படுத்தும்’



■ சிவாணி ஸ்ரீ

சேதனப் பசளை தயாரிப்பில் ஈடுபடும் தனியார் பிரிவினருக்கு, அரசாங்கத்தால் உதவிகள் பெற்றுக்கொடுக்கப்படுமென, சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்தார்.

தெரணியகலை, கிறீன் கொன்கோட் போர்ட்லைசா நிறுவனத்தில் முன்னெடுக்கப்படும் சேதனப் பசளை தயாரிப்பை நேற்று முன்தினம் (29) பார்வையிட்ட போதே, ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த சேதனப் பசளை தயாரிப்புத் தொடர்பான பயிற்சிகள், நிதியுதவிகள் என்பனவும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

‘நஞ்சற்ற உணவு உற்பத்தி’ என்ற அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

‘18 கிலோ கிராம் கொழுந்தை பறிக்க முடியாது’

# சத்தியாக்கிரகத்தில் குதித்த தொழிலாளர்கள்

■ எஸ்.சதீஸ், எம். கிருஸ்ணா

பொகவந்தலாவ பெருந்தோட்ட நிறுவனத்துக்குரிய கொட்டியாகல தோட்டத் தொழிலாளர்கள், அத்தோட்ட நிர்வாகத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்று (30) காலை தேயிலைத் தொழிற்சாலைக்குச் செல்லும் பிரதான வாயிலை மறித்து, சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பள நிர்ணய சபையால் தமக்கு அதிகரிக்கப்பட்ட 1,000 ரூபாய் சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு, தோட்ட நிர்வாகம் 18 கிலோ கிராம் கொழுந்தைப் பறித்தால் மாத்திரமே வழங்குவதாக அழுத்தம் கொடுப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

அவ்வாறு 18 கிலோ கிராம் கொழுந்தைப் பறிக்காத தொழிலாளர்களால் பறிக்கப்படும் கொழுந்தை, கிலோவொன்று 40 ரூபாய் விகிதம் செலுத்த நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளமைக்கு எதிர்ப்பு





தெரிவித்தே, தொழிலாளர்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

தற்போதைய நிலைமையின் கீழ், கடந்த 2 மாதங்களாக தோட்ட நிர்வாகத்தால் தொழிலாளர்கள் பல அழுத்தங்களுக்கு உள்ளாவதாகவும் 18 கிலோ கிராம் கொழுந்தை தினமும் பறிக்காமையால் தமது கொடுப்பனவுகள் குறைக்கப்படுவதால், பொருளாதார ரீதியாக தாம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கொட்டியாகல தோட்ட தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கோரியே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்

இந்த விடயம் குறித்து தோட்ட நிர்வாக அதிகாரிகளிடம் வினவியபோது, “தொழிலாளர்களுக்கு 1,000 ரூபாய் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த 1,000 ரூபாய்க்காக நாளொன்றுக்கு 18 கிலோ கிராம் கொழுந்தை பறிப்பது அவசியமாகும்.

“18 கிலோ கிராம் கொழுந்தை பறிப்பதற்கான வாய்ப்பு இருந்தும் தொழிலாளர்கள் அதனை நிராகரிப்பதால், தேயிலை தொழிற்றுறை வீழ்ச்சியடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

எமது இந்தக் கோரிக்கையை பல தோட்டத் தொழிலாளர்கள் ஏற்றுக்கொண்டு தொழிலில் ஈடுபடும் நிலையில், சில தொழிற்சங்கங்களின் அழுத்தங்களால் சில தோட்டத் தொழிலாளர்கள் இவ்வாறு போராட்டங்களை முன்னெடுக்கின்றனர்” என்றனர்.

தமிழ் மிரர் செய்திக்குப் பலன்

# அரங்கலை மக்களுக்கு உதவிக்கரம்

■ பி. சிவா

‘மலையகம் எங்கள் தாயகம்’ எனும் தொனிப்பொருளின் கீழ், கல்வி, சமூக, கலாசார, அபிவிருத்தி, பொருளாதாரம் ஊடாக மலையக மாற்றத்துக்கான புதிய பயணத்தைத் தொடரும் ‘மலையக விழிகள் உதவும் கரங்கள்’ அமைப்பானது, தனது ஐம்பதாவது உதவும் கரம் பணியை, கெட்டபுலா-அரங்கலை தோட்டத்தில் எதிர்வரும் 4ஆம் திகதி முன்னெடுக்கவுள்ளது.

இந்த அமைப்பின் தலைவர் குகநேஸ்வரனின் வழிகாட்டலில் இத்தோட்டத்தைச் சேர்ந்த 34 குடும்பங்களின் 191 பேருக்கு உலர் உணவுப்பொருள்கள் வழங்கி





“ ‘மலையக விழிகள் உதவும் கரங்கள்’ அமைப்பானது, கெட்டபுலா– அரங்கலை தோட்டத்தில் 4ஆம் திகதி முன்னெடுக்கவுள்ளது

வைக்கப்படவுள்ளன.

அரங்கலை தோட்ட மக்களின் பட்டினியைப் போக்குங்கள் என தமிழ் மிரர் பத்திரிகையில் இந்த மாதம் 28ஆம் திகதி வெளியிடப்பட்ட செய்தியின் பலனாகவே, ஊவா மாகாணத்தில் இயங்கும் இந்த அமைப்பு, அரங்கலை தோட்ட மக்களின் துயர் போக்க முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ‘தியவன்னா’ குரல்கள் மக்களின் குரல்களாக ஒலிக்க வேண்டும்

இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில், கறைபடிந்த நாள்கள் பல இருந்தன. எதிர்காலங்களில் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது என்பதற்கு எவ்விதமான உத்தரவாதங்களும் இல்லை. ஆனால், இடம்பெற்றுவிடக்கூடாது என்பதே, கடந்த கால கசப்பான காட்சிகள் எடுத்தியம்புகின்றன.

அதற்காக, நமது பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துப்படுத்தும், மக்கள் பிரதிநிதிகள் தனிப்பட்ட ரீதியிலேனும் உறுதிபூண்டிருக்க வேண்டும். ஏனெனில், பன்னாட்டு பாராளுமன்ற தினம் பேரபிமானத்துடன், நேற்று (ஜூன் 30) அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இலங்கை உள்ளிட்ட 179 நாடுகளை உள்ளடக்கி, பன்னாட்டு பாராளுமன்ற ஒன்றியம் 1889 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஜனநாயக ஆட்சிமுறைமை, பொறுப்பு கூறுதல், ஒத்துழைப்பு, சட்டவாக்கத்தில் ஆண்-பெண் சமநிலையைப் பேணுதல், இளைஞர் பங்கேற்பை வலுப்படுத்துதல் என்பன மிக முக்கியமானவையாக ஒன்றியத்தால் பேணப்படுகின்றன.

பாராளுமன்றம் ஒரு வலுவான நிறுவனம் என்றாலும், மேலே கூறப்பட்டிருக்கும் முக்கியமானவற்றில், சிலவற்றை வாக்காளர்கள் தேடவேண்டியிருக்கிறது. ஆனால், பெரும்பாலானவர்கள் முக்கிய விடயதானங்களை விட்டுவிட்டு, ‘சேறு பூசும்’ செயற்பாடுகளையே இன்னும் முன்னெடுத்து வருகின்றனர் என்பது, வெட்கக்கேடான விடயமாகும்.

சட்டத்தை இயற்றும் நிறுவனத்துக்குள் மக்கள் பிரதிநிதிகளாகவே இருப்பவர்கள், சட்டத்தை மீறிவிடுகின்றனர். இன்னும் சிலர், ஆட்சியதிகாரத்தை ஓரிரு தசாப்தங்களுக்கு நீடித்துக்கொள்ளும் வகையில், சட்டங்களில் திருத்தங்களை மேற்கொண்டு, பற்றிப்பிடித்துக் கொள்கின்றனர்.

ஆனால், அவசரமாக இயற்றிக்கொள்ள வேண்டிய சட்டங்கள், இயற்றப்படாமல் காலந்தாழ்த்தப்படுகின்றது. மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டும். ஆகையால், தியவன்னா ஓயாவிலிருந்து உண்மையாகக் குரல்கள் ஒலிக்கப்பட வேண்டும்.

பாராளுமன்றத்துக்கு பல்வேறான தளங்களின் ஊடாக மக்களின் பிரச்சினைகளைக் கொண்டு செல்லலாம். ஆனாலும் வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தை, மக்கள் பிரதிநிதிகள் ஒவ்வொருவரும் ஆகக் கூடுதலாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அத்துடன், பிரதமரிடம் கேள்வி கேட்டும் நேரத்தையும் தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேசங்களில் இருக்கும் பிரச்சினைகளுடன் தொடர்புபடுத்திக் கேட்டுக்கொள்ளவேண்டும்.

ஏனெனில், இவ்விரு சந்தர்ப்பங்களில் கேட்கப்படும் கேள்விகளும் பதில்களும், மக்களிடத்தில் விரைவாகச் சென்றடைகின்றன. ஏனைய குழுக்கூட்டங்களில் பேசப்படுவன, அறிக்கைகளுடன் மட்டுப்படுத்தப்பட்டு விடுகின்றன. ஊடகங்களின் ஊடாக வெளிவருவதும், மக்களுக்கு அறிக்கைகள் கிடைப்பதும் அரிதாகும்.

எமது நாட்டின் பாராளுமன்றத்தைப் பொறுத்தவரையில், கறைபடிந்த நாள்கள் பலவிருந்தாலும், அரசியலமைப்பை சவாலுக்கு உட்படுத்தி எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பின்னரும், ஏப்ரல் 23ஆம் திகதியன்றும் சபைக்குள் இடம்பெற்ற குழப்பங்கள், சம்பவங்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுத்து கறைகளை அகற்றவேண்டும்.

அதேபோல, சேறுபூசும் செயற்பாடுகளை எதிர்காலத்திலேனும் கைவிட்டு, மக்களின் குரலாய் ஒலிக்கவேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும்.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

# ராஜபக்‌ஷர்களின் ஆட்சியில் திவாலாகும் நாடு



புருஜோத்தமன் தங்கமயில்

ராஜபக்‌ஷர்கள் மீண்டும் ஆட்சி பீடமேறி, ஒன்றரை ஆண்டுகளுக்கு உள்ளேயே, நாடு திவாலாகும் கட்டத்தை அடைந்திருக்கின்றது.

ஏற்கெனவே பெறப்பட்ட கடன்களுக்கான வட்டிகளைச் செலுத்துவதற்கே, கடன்களைப் பெற வேண்டிய நிலை; உணவுப் பொருட்களின் இருப்பு அபாயக்கட்டத்தை அடைந்திருக்கின்றது; ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் வழங்குமா என்ற சந்தேகம் நீடிக்கின்றது; உள்நாட்டு உற்பத்தி பாரிய வீழ்ச்சியைச் சந்தித்து இருக்கின்றது; விவசாயிகள் உரத்துக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னொரு பக்கம், கறுப்புச் சந்தை பெரியளவில் விரிந்திருக்கின்றது. அங்கு ஒரு சில பண முதலைகளுக்கான வசதி வாய்ப்புகள் தங்கு தடையின்றி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருகின்றன. மக்களின் வியர்வையை மெல்ல மெல்ல உறிஞ்சி முடித்து, இப்போது இரத்தத்தையும் உறிஞ்சும் வேலைகளை ஆரம்பித்து இருக்கிறார்கள்.

நாட்டின் தேசிய வீரர்களாக, பாதுகாவலர்களாக முன்னிறுத்தப்பட்டே ராஜபக்‌ஷர்கள் மீண்டும் ஆட்சியில் அமர்த்தப்பட்டார்கள். அவர்களை ஆட்சியில் அமர்த்துவதற்காக, பௌத்த விகாரைகளுக்குள் இருந்து பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. தென் இலங்கையின் சமூகக் கட்டமைப்பின் ஆணி வேர், விகாரைகளுக்குள் இருக்கின்ற நிலையில், ராஜபக்‌ஷர்களின் மீள் வருகைக்கான கட்டியத்தை பௌத்த பிக்குகளே தலைமையேற்று மொழிந்தனர்.

ஆனால், அந்தப் பிக்குகளே ராஜபக்‌ஷர்கள் ஆட்சியில் அமர்ந்த குறுகிய காலத்துக்குள்ளேயே அவர்களுக்கு எதிராகத் திரும்பி இருக்கிறார்கள். மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அண்மித்த வெற்றியைப் பொதுத் தேர்தலில் பெற்று, தங்களுக்கு வேண்டிய அனைத்துச் சட்டத் திருத்தங்களையும் ராஜபக்‌ஷர்கள் குறுகிய காலத்துக்குள்ளேயே செய்தார்கள்.

ஆனால், ஆட்சியை ஒருமைப்படுத்தி முன்நகர்த்துவதற்கான வாய்ப்புகளைப் பயன்படுத்துவது குறித்துச் சிந்திக்க மறந்துவிட்டார்கள். அதனால், அரசாங்கத்தின் பங்காளிகள், அனுதாபிகள், திட்டம் வகுப்பாளர்கள் தொடங்கி அனைத்துத் தரப்பினரும் ராஜபக்‌ஷர்கள் மீது அதிருப்தியில் இருக்கிறார்கள்.

ராஜபக்‌ஷர்களுக்கு எதிராக, தென் இலங்கை தற்போது வெளிப்படுத்தியுள்ள அதிருப்தியின் அளவை, எந்தக் காலத்திலும் வெளிப்படுத்தியது இல்லை. 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்‌ஷ தோற்கடிக்கப்பட்ட தருணத்திலும் கூட, தென் இலங்கை மக்கள் தற்போதுள்ள அதிருப்தியின் அளவை வெளிப்படுத்தி இருக்கவில்லை.

ஆனால், இன்றைக்கு ராஜபக்‌ஷர்களின் நிலை என்பது, அபாயத்துக்குரிய கட்டத்தை அடைந்திருக்கின்றது. குறைந்தது பத்து ஆண்டுகளுக்கான ஆட்சியில் இருக்க வேண்டும் என்கிற திட்டத்தோடு 2019இல் ஆட்சி பீடமேறிய ராஜபக்‌ஷர்களுக்கு முதல் ஐந்து ஆண்டுகளையே பிரச்சினைகள் இன்றிக் கடக்க முடியுமா என்ற சிக்கல் ஏற்பட்டிருக்கின்றது.

அண்மையில், எரிபொருள் விலையேற்றத்தை எதிர்த்து ஆளுங்கட்சியின் பிரதான கட்சியான பொதுஜன பெரமுனவே கண்டன அறிக்கை வெளியிடும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்‌ஷ, அந்தக் கட்சி முன்னிறுத்தி ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்‌ஷ, அந்தக் கட்சியின் கூட்டணியில் அங்கம் வகித்து மொட்டுச் சின்னத்திலேயே தேர்தலில் வென்ற உதய கம்மன்பில உள்ளிட்டவர்கள் கூடிப்பேசி, முடிவெடுத்து அறிவித்த எரிபொருள் விலையேற்றத்தை, பொதுஜன பெரமுன அறிக்கை ஊடாகக் கண்டிக்கிறது. அதிலும், எரிபொருள் அமைச்சராக கம்மன்பிலவை பதவி விலகுமாறும் கோருகிறது என்றால், ஆளுங்கட்சிக்குள் காணப்படும் குழப்பங்களின் அளவைப் புரிந்து கொள்ள முடியும்.

பிரதமராக மஹிந்த ராஜபக்‌ஷ பதவி வகிக்கின்ற போதிலும், 20ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம், அவரின் அதிகாரங்கள் பிடுங்கப்பட்டுவிட்டன. அவ்வாறான நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவினதும் அவரது இராணுவ செயலணியினதும் திட்டங்களின் படியே நாடு நிர்வகிக்கப்படுகிறது.

இங்கு, அமைச்சர்களாக இருந்தாலும் அவர்களின் அதிகாரம் செல்லாக்காசான நிலைதான். அப்படியான நிலையில், பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரான பசில் ராஜபக்‌ஷவை மீண்டும் பாராளுமன்றத்துக்குள் நுழைந்து அமைச்சராகப் பதவியில் அமர்த்தினால், தங்களின் அதிகாரங்களை மீளப்பெற முடியும் என்று பொதுஜன பெரமுனவில் குறிப்பிட்டளவான அரசியல்வாதிகள் நினைக்கிறார்கள்.

அதன்போக்கில்தான், பசிலின் பாராளுமன்ற பிரவேசத்துக்கான துதிபாடல்களும் ஆராதனைகளும் செய்யப்படுகின்றன. ஆனால், பசில் மீண்டும் அமைச்சரவைக்குள் வந்தால், ஆட்சி அதிகார மையம் இரு துருவங்களாக மாறும்; அது, ஜனாதிபதிக்கு அவ்வளவு இனிப்பானதாக இருக்காது என்று அவரது சகாக்கள் அச்சப்படுகிறார்கள்.

அத்தோடு, ஆளுங்கட்சியின் பங்காளிக் கட்சிகளுக்கு பசில் மீதான பயம் என்பது நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. ஏனெனில், தங்களது கட்சிகளை இல்லாதொழித்து, ஒரே கட்சியாகப் பெரமுனவை, பசில் வளர்க்க நினைக்கிறார். அதன்மூலம், பங்காளிக் கட்சிகளின் தலையீடுகள் இன்றி, அடுத்த ஜனாதிபதி வேட்பாளராகத் தன்னை நிலைப்படுத்தலாம் என்பது பசிலின் திட்டம்.

அதனால்தான், விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார உள்ளிட்ட பங்காளிக் கட்சிகளுக்கு எதிரான நிலையை, தன்னுடைய விசுவாசிகளைக் கொண்டு பசில் செய்கிறார். எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிராக வெளியிடப்பட்ட அறிக்கை, உண்மையில் உதய கம்மன்பிலவை இலக்கு வைத்து வெளியிடப்பட்டது.

அண்மையில், விமல் வீரவன்சவின் அமைச்சின் கீழிருந்த அரச நிறுவனமொன்று, அவரிடமிருந்து மஹிந்த அமரவீரவின் அமைச்சுக்கு மாற்றப்பட்டது. அது தொடர்பில், அவருக்கு எந்தவித முன்னறிவிப்பும் விடுக்கவில்லை. அது குறித்து, விமல் வீரவன்ச ‘பேஸ்புக்’கில் புலம்பும் அளவுக்கு அரசாங்கத்தின் உள்குளறுபடிகள் இருக்கின்றன.

இன்னொரு பக்கம், ராஜபக்‌ஷர்களின் பிரசார பீரங்கிகளாக இருந்த ஊடகங்கள் கூட, இன்றைக்கு எதிரான நிலையெடுத்து விமர்சிக்கத் தொடங்கிவிட்டன. ராஜபக்‌ஷர்களின் வருகை, நாட்டில் தேனையும் பாலையும் ஓட வைக்கும் என்று 24 மணி நேரமும் ஓதிக்கொண்டிருந்த சம்பந்தப்பட்ட ஊடகங்கள், அரசாங்கத்தின் மீதான மக்களின் அதிருப்தியைச் சமாளிக்க முடியாமல், அதனை மெல்ல மெல்ல வெளிப்படுத்த ஆரம்பித்துவிட்டன.

கொரோனா பெருந்தொற்று, நாட்டு மக்களை அனைத்து விதத்திலும் பாதித்துவிட்டது. வருமானம் என்பது வெகுவாகக் குறைந்துவிட்டது. மக்கள் அடகுக்கடைகளை நோக்கிச் செல்வது வாடிக்கையாகி விட்டது. நகை நட்டுகள் இல்லாத மக்களின் நிலை, இன்னும் மோசம்.

அப்படியான நிலையில், நாட்டு மக்களுக்கு உரையாற்றுவதாகக் கூறிக் கொண்டு, பௌத்த விகாரையின் பின்னணியில், ஒரு மணித்தியாலத்துக்கு மேலாகக் கடந்த கால ஆட்சிகளைக் குறைகூறி, மக்களை எரிச்சலூட்டுகிறார் ஜனாதிபதி. நாடு மீளமுடியாத பொருளாதார அபாயத்தின் இருக்கும் போது, அது குறித்துச் சிந்திக்காமல், மீண்டும் மீண்டும் தங்களின் அனைத்துத் தோல்விகளையும் கடந்த கால ஆட்சியாளர்கள் மீது போட்டுவிட்டு நழுவிவிட முடியும் என்பது, எவ்வளவு அபத்தமானது.

அதிலும் நகைப்புக்குரியது என்னவென்றால், நல்லாட்சிக் காலம் என்கிற ஐந்து வருடங்களுக்கு முன்னாலுள்ள பத்து ஆண்டுகளையும் இதே ராஜபக்‌ஷர்கள்தான் ஆட்சி செலுத்தினார்கள். ஆனால், அதையெல்லாம் மறந்து நின்று, நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நல்லாட்சிக் காலம் மட்டுமே காரணம் எனும் தோரணை, ‘எதைத் தின்றால் பித்தம் தெளியும்’ என்ற நிலைக்கு ஒப்பானது.

ராஜபக்‌ஷர்கள் தொடர்ச்சியாக, போர் வெற்றி வாதத்தைத் தங்களது பிரதான காப்புக் கருவியாக கையில் ஏந்தி இருக்கின்றார்கள். இப்போதும் அதையே தூக்கிக் கொண்டு வருகிறார்கள்.

ஆனால், மக்களின் வயிற்றின் பசி, நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் போது, போர் வெற்றி வாதம் ஒரு பொருட்டுக்கும் உதவாது என்பது ராஜபக்‌ஷர்களுக்கு விளங்கவில்லை. நாட்டின் எதிர்காலம் குறித்த எந்தக் கரிசனையும் இன்றி, தங்களின் குடும்பங்கள், எதிர்கால ஆட்சிக்கான திட்டங்களை மாத்திரமே வைத்துக் கொண்டு, ராஜபக்‌ஷர்கள் முன்நகர்த்து கொண்டிருக்கிறார்கள். மற்றப்படி, அரசாங்கத்துக்குள் நிகழும் குளறுபடிகளும் கூட ராஜபக்‌ஷர்களுக்கு இடையிலான அதிகாரப் போட்டியின் போக்கிலானவைதான்.

ஆனால், நாடும் நாட்டு மக்களும் இவ்வளவு அபாயங்களைச் சந்தித்து நிற்கும் போது, பிரதான எதிர்க்கட்சியோ எந்தவித பொறுப்பும் இன்றி, தூங்கியே காலத்தைக் கழித்து வருகின்றது. அடுத்த தேர்தல் வர, இன்னமும் காலம் இருக்கின்றது. அப்போது விழித்தால் போதும் என்பது அவர்களின் உத்தேசம். அப்படியான நிலையில், நாடு எப்படித் தப்பித்துக் கொள்ளும்?’



## வாழ்வியல் தரிசனம்

உங்களுடன் நண்பர்கள் சுற்றியிருக்க விரும்பும்போது, நீங்கள் தேவையில்லாமல் விலகினால், உங்களுக்கு மனச்சோர்வு இருக்கின்றது என்று அர்த்தம். இதற்கு ஒரே வழி, நீங்களே உங்களுடன் தோழமை கொள்வதுதான். உங்களுக்கு நீங்களே எஜமானன். அத்துடன், உங்களுக்கு நீங்களே நம்பிக்கையான நபரும் கூட!

ஒருவரிடம் பணம் இருக்கும்போது, அவரைச் சுற்றி, பலர் சேர்ந்துவிடுவார்கள். அவரிடம் இருக்கும் பணத்தைச் செலவழிக்கச் செய்தபின்னர், அவரைக் கைகழுவி, நடுத்தெருவில் விட்டுவிடுவது உலக யதார்த்தம். ஆனால், நல்ல நண்பர் எத்தகைய துன்பங்கள் சூழ்ந்து வந்தாலும் காவல் செய்யும் காவலன் போல் இணைந்தே இருப்பான்.

நண்பர்கள் என்று நம்பி, அவர்கள் கெட்டவர்கள் என்று தெரியாமல் போனவர்களை, நாங்கள் அன்றாடம் சந்தித்துக்கொண்டிருக்கின்றோம். நண்பர்களிடம் நம்பி ஏமாந்தவர்கள் ஒன்றுக்கும் வழி இல்லாது, நடுவீதியில் தனிமைப்பட்டு நிற்பது பரிதாபமானது. எனவே, துணிவுடன் இயங்குவதே மனோபலத்தை உருவாக்கும்.

இயலாது; என்னால் முடியாது எனும் எண்ணங்கள் தகர்க்கப்படல் வேண்டும். அனுபவப்பட்டவர்களுக்கு ரோசம் அதிகம். எளிதில் எவருடனும் நட்புக்கொள்ளல் ஆகாது. வீறு பெற்றவனை வீழ்த்த முடியாது.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

எரிபொருள் விலையேற்றம்:

### கடலுக்குச் செல்லாத மீனவர்கள்

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில், மீனவர்களின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டு உள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

மூதூர் பிரதேசத்தின் ஹபிப் நகர், தக்வா நகர் போன்ற பகுதிகளில் வாழும் மீனவர்கள் ஒரு நேர உணவை உண்பதற்குக் கூட சிரமப்படுவதாகவும் எரிபொருட்களின் விலை பத்தாயிரம் எனின், நான்காயிரத்துக்கே மீன்கள் பிடிபடுவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

மீனவர்கள் கடலுக்குச் செல்லாது, கடற்கரையோரங்களில் படகுகள் நிறுத்தப்பட்டுள்ளன. டீசல், மண்ணெண்ணெய் போன்றவற்றின் விலைகள் வெகுவாக அதிகரித்துள்ளதால், அவற்றை வாங்குவதற்குக் கூட பணம் இல்லாததால் வீடுகளிலேயே இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு சிரமப்படும் மீனவர்கள், மூன்று நேர உணவைக் கூடச் சரியாக உண்ண முடியாத நிலையில் இருப்பதுடன் அவர்கள், ஒரு நேர உணவை உண்பதற்கு எரிபொருட்களின் விலையை குறைத்துத் தருமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்.

-எப். முபாரக்



திருப்போரூர்

சிவசங்கர் பாபா விசாரணைக்கு அழைப்பு

# கதறிக் கண்ணீர் விட்ட பக்தர்கள்



கேளம்பாக்கம், 'சுஷில் ஹரி இன்டர்நேஷனல் ரெசிடென்ஷியல்' பாடசாலை நிறுவுனர் சிவசங்கர் பாபா, மீது பாலியல் புகார் தொடர்பில், மாமல்லபுரம் மகளிர் பொலிஸார் விசாரித்து,வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

இவ்வழக்கை தற்போது, சி.பி.சி.ஐ.டி, பொலிஸார் விசாரிக்கின்றனர். சென்னை, எழும்பூரிலுள்ள, சி.பி. சி.ஐ.டி, தலைமை அலுவலகத்தில் விசாரணை நடத்தினர். அப்போது, மாணவியருக்கு, ஆபாச ஈமெயில் அனுப்பியது, 'வட்ஸ்அப்' வீடியோவில் பேசும் போது, மாணவியரிடம் உடைகளை அகற்றுமாறு கூறியது, வெளிநாட்டு மது மற்றும் சொக்லெட் கொடுத்தமை குறித்தும் இவரிடம் விசாரணை செய்யப்பட்டது.

"மாணவியர், என் குழந்தைகளுக்கு நிகரானவர்கள். அவர்களைக் கட்டிப்பிடிப்பது, முத்தம் கொடுப்பதில் என்ன தவறு இருக்கிறது. ஆன்மிக சொற்பொழிவின் போது, எல்லா விதமான, விடயங்கள் குறித்தும் பேசுவேன். அதில் பாலியல் கல்வி குறித்தும் இருக்கும்" எனப் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். அவரது சொகுசு அறையில் இருந்த கணினி, மடிக்கணினி உள்ளிட்ட ஆதாரங்கள், மதுப்போத்தல்களைப் பொலிஸார் கைப்பற்றினர். சிவசங்கர் பாபாவைக் காண அவரது பக்தர்கள், சாலையின் இருபுறமும் நீண்ட வரிசையில் நின்று, கைதட்டினர். "சிவசங்கர் பாபா மீது அபாண்டமாகப் பழி சுமத்தப்பட்டு உள்ளது" எனக் கூறிய அவர்கள், அவரை வானில் அழைத்துச் செல்லும் போது கண்ணீர் விட்டுக் கதறினர்.



புதுடெல்லி

கோஷ்டி உட்பூசல்

## ராகுல், சித்து சந்திப்பு திடீர் ரத்து

பஞ்சாப் காங்கிரஸுக்குள் ஏற்பட்டுள்ள கோஷ்டி உட்பூசலைத் தவிர்க்கும் முகமாக ராகுல்காந்தி எம்.பியும் சித்துவும் சந்திக்கத் திட்டமிட்டிருந்தனர். இச்சந்திப்பு திடீரென இரத்துச் செய்யப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

பஞ்சாப் சட்ட சபைக்கு விரைவில் தேர்தல் நடக்கிறது. இம்மாநில காங்கிரஸ் முதலமைச்சர் அமீரந்தர்சிங்குக்கு எதிராக முன்னாள் அமைச்சரும், முன்னாள் கிரிக்கெட் வீரருமான சித்து பகிரங்கமாக விமர்சனம் செய்து போர்க்கொடி தூக்கி வருகிறார். இதனால், பஞ்சாப் காங்கிரஸ் கோஷ்டி பூசலால் கட்சி பிளவு ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைத் தவிர்க்க காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா, மூன்று பேர் கொண்ட குழுவை அமைத்துள்ளார். இக்குழுவை அமிரீந்தர்சிங் ஏற்கெனவே, சந்தித்து விளக்கமளித்துள்ளார். இந்நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக சித்து, டெல்லியில் காங்கிரஸ் எம்.பி ராகுல், பிரியங்கா ஆகியோரைச் சந்தித்து பேசத் திட்டமிட்டிருந்தார். ஆனால், சித்துவை சந்திக்க ராகுல் அனுமதி தரவில்லை; மறுத்து விட்டதாகக் கூறப்படுகிறது.

திண்டிவனம்

சசிகலாவின் அடியாட்களால்

## முன்னாள் அமைச்சருக்கு கொலை மிரட்டல்



விழுப்புரம் வடக்கு மாவட்ட அண்ணா திராவிட முன்னேற்ற கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சி.வி. சண்முகம் கடந்த 9ஆம் திகதி, திண்டிவனம் ரோஷணை பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார்.

இப்புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

'நான் கடந்த 7ஆம் திகதி வி.கே.சசிகலா குறித்து ஊடகங்களில் சில கருத்துகளைத் தெரிவித்தேன். அதற்கு வி.கே.சசிகலா நேரடியாக பதிலளிக்காமல், தன் அடியாட்களை வைத்து தொலைபேசி மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் ஆபாசமாகவும், அநாகரிகமாகவும் பேசியும், பதிவிட்டும் வருகிறார்கள். மேலும் தொலைபேசியிலும் என்னை அச்சுறுத்தும் வகையில் 500 பேர் கொலை மிரட்டல் விடுத்தும் வருகின்றனர்.

தொலைபேசி மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் எனக்கு, தொடர்ந்து கொலை மிரட்டல் விடுக்கப்பட்டு வருகிறது. வி.கே. சசிகலா பற்றி பேசினால் உன்னையும், உன் குடும்பத்தையும் தொலைத்து விடுவோம் எனவும் மிரட்டுகிறார்கள். இதற்கு வி.கே.சசிகலாவின் தூண்டுதலே காரணமாகும். எனவே கொலை மிரட்டல் விடுக்கவும், ஆபாசமாக பேசவும் காரணமாக இருந்த வி.கே.சசிகலா மீதும், என் தொலைபேசிக்கு வந்த அழைப்புகளில் பேசிய மர்ம நபர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

சென்னை

ஒளிப்பதிவுச் சட்டத்தில் திருத்தம்;

## கமல் கண்டனம்



ஒளிப்பதிவுச் சட்டத்தில் மத்திய அரசாங்கம் திருத்தம் செய்ததற்கு, மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவரது டுவிட்டர் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சினிமா, ஊடகங்கள், கல்வியறிவு மூன்றும், இந்தியாவின் மூன்று சின்னமான குரங்குகளாக இருக்க முடியாது. வர இருக்கும் தீமையைப் பார்ப்பது, கேட்பது, பேசுவது என்பது, ஜனநாயகத்தை காயப்படுத்தும், பலவீனப்படுத்தும் முயற்சிகளுக்கு எதிரான ஒரே மருந்து. நம் கருத்து சுதந்திரத்தை, நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறுமக்கள் நீதி மய்யம் தலைவர் கமல் கண்டனத்தில் தெரிவித்துள்ளார்.

திருப்பதி

மனைவியை கொலை செய்து,

## சூட்கேசில் வைத்து எரித்த கணவன்

திருப்பதியில், மனைவி புவனேஸ்வரியைக் கொன்று சூட்கேசில் வைத்து வேறு இடத்துக்குக் கொண்டு சென்று சடலத்தை எரித்த கணவர் ஸ்ரீகாந்த் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆந்திர மாநிலம் திருப்பதியிலுள்ள ரூயா அரசாங்க மருத்துவமனை வளாகத்தில், சமீபத்தில் எரிந்த நிலையில் ஒருசூட்கேசில் பெண்ணின் பிணம் கண்டெடுக்கப்பட்டது. சூட்கேசில் வைத்து எரிக்கப்பட்ட பெண், ஐதரபாத்தில் கணினி பொறியியலாளராகப் பணியாற்றி வந்தவரென பொலிஸார் கண்டுபிடித்தனர். இது குறித்து விசாரணை நடத்திய பொலிஸார், அந்தப் பெண்ணின் கணவனைக் கைது செய்தனர்.

இது குறித்துபொலிஸார் கூறியதாவது: இவர்கள் காதலித்து திருமணம் செய்து கொண்டனர். திருமணமானது முதல் இருவருக்கும் இடையே அடிக்கடி சண்டை ஏற்பட்டு வந்தது.

இந்நிலையில், கடந்த 22ஆம் திகதி முதல் புவனேஸ்வரியை தொடர்பு கொள்ள முடியாததால், ஸ்ரீகாந்திடம் அவரது பெற்றோர் விசாரித்தனர். அதில், மனைவி கொரோனாவால் பாதிக்கப்பட்டு ஐதராபாத் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாகவும், மருத்துவமனை நிர்வாகம் அவரது உடலை எரித்து விட்டதாகவும் கூறியுள்ளான்.

கண்காணிப்பு கெமரா பதிவுகளை ஆய்வு செய்த போது, ஸ்ரீகாந்த ரெட்டி அடுக்குமாடி குடியிருப்பிலிருந்து ஒரு சூட்கேசை எடுத்துச் சென்றதும், அப்போது அவர்களின் குழந்தை உடனிருந்ததும் தெரிய வந்தது. ஒரு வாடகைக் காரில் ரூயா மருத்துவமனைக்கு அந்த சூட்கேசை எடுத்துச் சென்று, ஒரு புதரின் மறைவில் பெற்றோல் ஊற்றி எரித்துள்ளான். அப்போது அவரது தோளில் குழந்தை இருந்தது. வாடகை கார் சாரதியைக் கைது செய்து விசாரித்ததில் உண்மை தெரிய வந்தது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தங்கவயல்

கோவில்

## அர்ச்சகரை அச்சுறுத்தி கழிவறையைச் சுத்தம் செய்த அதிகாரி

பங்காரு திருப்பதி கோவில் கழிவறையை, அர்ச்சகரை வைத்துச் சுத்தம் செய்த அதிகாரி மீது தாலுகா அர்ச்சகர்கள் சங்க தலைவர் மஞ்சுநாத் தீக்ஷித் புகார் செய்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியுள்ளதாவது:

இக்கோவிலில் செயல் அதிகாரியாக சுப்ரமணியம், மூன்றரை ஆண்டுகளாக பதவி வகித்து வருகிறார். கோவில் அர்ச்சகரொருவரை, 'கழிப்பறையை துப்புரவு செய்ய வேண்டும். அப்படி செய்தால்தான் சம்பளம். இல்லையேல் வேலையும் இல்லை. சம்பளமும் இல்லை' என அந்த அதிகாரி கூறி உள்ளார். இது குறித்து, தாலுகா அர்ச்சகர்கள் சங்கம், அர்ச்சகர்களை மிகவும் கொடுமைப்படுத்தும் சம்பவத்தை புகைப்பட ஆதாரங்களுடன் அரசாங்கத்துக்கு முறைப்பாடு செய்துள்ளனர். இதன் மீது முறையான விசாரணை நடத்தி நியாயம் வழங்க வேண்டும்.





# 'கெப்பிட்டல்' வானொலி மறுமலர்ச்சி மன்றத்தின் ஓராண்டு பூர்த்தி

'கெப்பிட்டல்' வானொலி மறுமலர்ச்சி மன்றமானது, 2019.07.01 ஆம் திகதி, 'உதவிடு மனம் நிறைந்திடு' எனும் தூர நோக்கத்துடன் சமூகப் பணிக்காக ஆரம்பிக்கப்பட்டது. தற்போது, இரண்டாம் ஆண்டு விழாவைக் கொண்டாடுகின்றது. கடந்த காலங்களில், மாகாணங்கள், மாவட்டங்கள், இனம், மதம் தாண்டி, பல ஊர்களில் சமூகப் பணியை, இம்மன்றம் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாலர் பாடசாலைகள், பாடசாலைகள், சிறுவர் இல்லம் போன்றவற்றில் ஏழை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கி, அவர்களின் கல்வியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி உள்ளதுடன், முதியோர் இல்லப் பராமரிப்பு, பின்தங்கிய குடும்பங்களுக்குத் தேவையான உபகரணங்களை வழங்கியும் அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றியும் 'கெப்பிட்டல்' வானொலி மறுமலர்ச்சி மன்றம் வீறுநடைபோடுகின்றது.

'கெப்பிட்டல்' வானொலி மறுமலர்ச்சி மன்றத்தின் உறுப்பினர்களினதும் 'கெப்பிட்டல்' எப்.எம் பணிப்பாளர்களினதும் முழுமையான ஆதரவுடனேயே மேற்குறிப்பிட்ட இலக்குகளை அடையமுடிந்ததுடன், கடந்த இரண்டு வருடங்களின் மக்களின் வரவேற்பை பெற்றுள்ள மன்றமாக, 'கெப்பிட்டல்' வானொலி மறுமலர்ச்சி மன்றம் நிலைத்து நிற்கின்றது.






## இலுப்பைக்குளம், தங்கபுரம் கிராமங்களுக்கு நிவாரணம்

ஏஎம்ஏ பரீட்

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இலுப்பைக்குளம் கிராமம், மூதூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தங்கபுரம் கிராமம் ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் 200 குடும்பங்களுக்கு 1,500 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன. இச்செயற்றிட்டத்துக்கு உதயன் பத்மநாதனின் Pledge to Restore Foundation அமைப்பும் பிரான்சிஸின் People helping people Foundation அமைப்பும் இணைந்து அனுசரணை வழங்கி இருந்தார்கள். கிராம உத்தியோகத்தர் , கிராம அபிவிருத்திச் சங்கங்கள் இணைந்து உணவுப்பொதிகளைக் கையளித்தார்கள்.





## புபுரஸ்ஸ லெவலன் டிவிசன் குடும்பங்களுக்கு நிவாரணம்

நவி

வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட கண்டி மாவட்ட பெருந்தோட்டப்பகுதி மக்களுக்கு, கண்டி வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன்படி புபுரஸ்ஸ லெவலன் டிவிசன், தொழிற்சாலை பிரிவு உள்ளிட்ட தோட்டங்களில் வாழும் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டன.





## இரத்தினபுரி, இறக்குவானை, பலாங்கொடை பகுதிகளுக்கு உணவுப் பொதிகள்

பலாங்கொடை மஹிந்த குமார்

இரத்தினபுரி, இறக்குவானை, பலாங்கொடை, போன்ற தோட்ட பகுதிகளில் தொழில் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள 2,000 குடும்பங்களுக்கு, இரத்தினபுரி மாவட்ட இலங்கை தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட அமைப்பாளரும், முன்னாள் வனவள அமைச்சின் செயலாளருமான டீ.எம் தர்மதாஸ சில்வாவால் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

## விநாயகர், ஐயனார் குடியிருப்புகளுக்கு உணவுப் பொருட்கள் உதவி

நடராஜா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி திருநெறிக் கழகத்தால், ஸ்கந்தபுரம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள விநாயகர் குடியிருப்பில் 20 குடும்பங்களுக்கும் ஐயனார் குடியிருப்பில் 45 குடும்பங்களுக்கும் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில், திருநெறிக் கழக செயலாளர் அ.சிவஞானசுந்தரம், கிளிநொச்சி மாவட்ட இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் க. விஜிதன், இப்பகுதி கிராம அலுவலர்கள் ஆகியோரால் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.



## மட்டக்களப்பு, இராமகிருஸ்ண மிசன் ஊடாக நிவாரணப் பொதிகள்

தம்பிராசா சுகாதேவராஜா, வி.சுகிர்தகுமார், நூருல் ஹுதா உமர், ஐ.எல்.எம். நாஸிம்

மட்டக்களப்பு, இராமகிருஸ்ண மிசன் ஊடாக, நாவிதன்வெளி, வளத்தாப்பிட்டி, ஆலையடிவேம்பு, பொத்துவில் ஆகிய நான்கு கிராமங்களைச் சேர்ந்த வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 600 குடும்பங்களுக்குத் தலா 150 பொதிகள் வீதம் விநியோகிக்கப்பட்டன.

இந்நிகழ்வுகளில், மட்டக்களப்பு இராமகிருஸ்ண மிஷன் ஸ்ரீமத் சுவாமி தட்சையானந்தாஜீ மகராஜ், மட்டு.இ.கி.மிசன் உதவி மேலாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், அம்பாறை மாவட்ட இந்து இளைஞர் மன்ற தலைவர் த. கயிலாயபிள்ளை, அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் க.ஜெயராஜ், நாவிதன்வெளி பிரதேச செயலாளர் என்.ரங்கநாதன், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் ஹனீபா ஆகியோர் கலந்துகொண்டு, அந்தந்த இடங்களில் இடம்பெற்ற நிகழ்களில் உணவுப் பொதிகளை வழங்கிவைத்தார்கள்.





கனடா

# வெப்பத்தால் பலர் உயிரிழப்பு

## உயர் வெப்ப நிலையாக 49.5 பதிவு


கனடாவில் அதிகரித்த வெப்பம் காரணமாக பலர் உயிரிழந்துள்ளனர்.

வன்கூவர் பகுதியிலுள்ள பொலிஸார், கடந்த வெள்ளிக்கிழமை முதல் 130க்கும் மேற்பட்ட திடீர் இறப்புகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். இதில் பலர் வயதானோர் என்பதுடன், ஏற்கெனவே மோசமான சுகாதார நிலைமைகளைக் கொண்டிருந்தவர்கள் ஆவர்.

இந்நிலையில், பல சந்தர்ப்பங்களில் வெப்பமே இறப்புக்கு காரணமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் கனடாவானது தொடர்ச்சியாக மூன்றாவது நாளாக பதிவு செய்யப்பட்ட உயர் வெப்பநிலையாக 49.5 பாகை செல்சியஸ் வெப்பநிலையை, பிரித்தானியக் கொலம்பியாவின் லிட்டனில் கனடா பதிவு செய்திருந்தது.

கனடாவில் இவ்வாரத்துக்கு முன்னர் ஒருபோதும் வெப்பநிலை 45 பாகை செல்சியஸை தாண்டியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.





ஆப்கானிஸ்தான்

### கஸ்னி மீது

# தாக்குதலை ஆரம்பித்த தலிபான்

கஸ்னி மீது தாக்குதல் ஒன்றை தலிபான் ஆயுததாரிகள் ஆரம்பித்துள்ளதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் படைகளுடன் தலிபான்கள் மோதியதுடன், மத்திய ஆப்கானிஸ்தான் நகரான கஸ்னியைக் கைப்பற்றும் முயற்சி ஒன்றாக வெடிபொருள்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலையும் தென் மாகாணமான கந்தகாரை இணைக்கும் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள கஸ்னி மீதே நேற்று முன்தின இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், இழந்த நிலத்தை மீளக் கைப்பற்ற ஆப்கானிஸ்தான் படைகள் முயல்வதாக சிரேஷ்ட ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

தாய்வான்

# ஜூடோ பயிற்சியில் சிறுவன் உயிரிழப்பு

ஜூடோ பயிற்சி ஒன்றின்போது தரையில் 27 தடவைகள் அடிக்கப்பட்ட ஏழு வயதுச் சிறுவன் தாய்வானில் உயிரிழந்துள்ளார்.

இச்சிறுவனின் சக வகுப்பு மாணவன் ஒருவனும், அவனது பயிற்சியாளரும் இவன் மீது குத்துகளை பயிற்சி பெற்றதில் இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் குறித்த சிறுவனுக்கு மூளையில் மோசமான இரத்தக்கசிவு ஏற்பட்டிருந்தது.

பின்னர் குறித்த சிறுவன் கோமாவுக்குச் சென்று உயிர் காப்பிலிருந்தான்.





எதியோப்பியா

# முன்னேறும் போராளிகள்

எதியோப்பியாவின் திக்ரே பிராந்தியத் தலைநகரான மெகெல்லேயை அரசாங்கப் படைகளிடமிருந்து கைப்பற்றியதையடுத்து, அங்குள்ள போராளிகள் தொடர்ந்து முன்னேறுகின்றனர்.

தற்போது மெகெல்லேயிலிருந்து வட மேற்காக 140 கிலோ மீற்றரிலுள்ள ஷிரே நகரத்துக்குள் போராளிகள் நுழைந்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எதியோப்பிய இராணுவத்தை ஆதரிக்கும் எரித்திரியப் படைகள் குறித்த நகரத்தை முன்னர் கைவிட்டிருந்தனர்.

இந்நிலையில், எரித்திரியா, அம்ஹரா பிராந்தியத்துக்குள் நுழைந்து எதிரியை அழிக்கப் போவதாக போராளிகளின் பேச்சாளர் கெடகு றெடா தெரிவித்துள்ளார். அம்ஹராவிலுள்ள ஆயுதக் குழுக்கள், அரசாங்கப் படைகளுக்கு ஆதரவளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நெதர்லாந்து

# 'கடற்படைத் தளத்தை ரஷ்யா அச்சுறுத்தியது'

## நெதர்லாந்து தெரிவிப்பு

கருங்கடலில் இம்மாத ஆரம்பத்தில் நெதர்லாந்துக் கடற்படைத் தளம் ஒன்றை ரஷ்ய தாக்குதல் ஜெட்கள் அச்சுறுத்தியதாக, நெதர்லாந்து பாதுகாப்பு அமைச்சர் அங்க் பிஜ்லெவெல்ட்-ஸ்கூட்டன் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

வானிலிருந்து தரைக்கான ஏவுகணைகளைக் கொண்டிருந்த ஜெட்கள், போலியான தாக்குதல்களை நடத்தியதுடன், தொடர்பாடல் சாதனங்களையும் சீர்குலைத்துள்ளன.

இந்நிலையில், குறித்த தொகுதியானது ரஷ்யக் கடற்பரப்புக்குள் நுழைவதைத் தடுக்கும் பொருட்டு தாக்குதல் ஜெட்களையும் குண்டுவீச்சு விமானங்களையும் அனுப்பியதாக ரஷ்ய பாதுகாப்பமைச்சு தெரிவித்ததாக செய்தி முகவரகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.





# பறக்கும் கார்

ஸ்லோவாக்கியாவில் உள்ள நிற்ரா, பிரடிஸ்லாவா சர்வதேச விமானங்களுக்கு இடையே 35 நிமிட பறப்பை பறக்கும் கார் ஒன்று பூர்த்தி செய்துள்ளது. இக்காரானது 1,000 கிலோ மீற்றருக்கு, 8,200 அடி உயரத்தில் பறக்கும் என இதன் தயாரிப்பாளர் பேராசிரியர் ஸ்டெஃபன் கிளெய்ன் தெரிவித்துள்ளார். காரை இரண்டு நிமிடங்கள் 15 செக்கன்களில் விமானமாக மாற்றியிருந்தனர்.

### முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

# இங்கிலாந்திடம் வீழ்ந்த இலங்கை

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இலங்கை தோற்றுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், செஸ்டர்-லீ-ஸ்ரீட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற குறித்த போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்தின் அணித்தலைவர் ஒய்ன் மோர்கன், இலங்கையை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தார்.

இலங்கை சார்பாக, சரித் அஸலங்க, தனஞ்சய லக்ஷன் ஆகியோர் அறிமுகத்தை மேற்கொண்டதுடன், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பிரவீன் ஜெயவிக்கிரம அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில், முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை, ஆரம்பத்திலேயே கிறிஸ் வோக்ஸ் (2), டேவிட் வில்லியிடம் (1) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து தடுமாறியது.

பின்னர் அணித்தலைவர் குஷல் பெரேரா, வனிடு ஹஸரங்கவின் இணைப்பாட்டத்தில் இனிங்ஸை இலங்கை நகர்த்தியது. இச்சந்தர்ப்பத்தில் 54 (65) ஓட்டங்களுடன் ஹஸரங்க வோக்ஸிடம் வீழ்ந்ததோடு, அடுத்து வந்த தனஞ்சய லக்ஷன் வோக்ஸிடமும், ரமேஷ் மென்டிஸ் மொயின் அலியிடம் வீழ்ந்ததோடு, குஷல் பெரேராவும் 73 (81) ஓட்டங்களுடன் டேவிட் வில்லியிடம் வீழ்ந்தனர்.

இதையடுத்து, பினுர பெர்ணாண்டோ வில்லியிடமும், துஷ்மந்த சமீரவும், பிரவீன் ஜெயவிக்கிரமவும் ரண் அவுட் முறையில் ஆட்டமிழக்க, 42.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 185 ஓட்டங்களையே இலங்கை பெற்றது.

பதிலுக்கு, 186 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, ஜொனி பெயார்ஸ்டோவின் 43 (21) ஓட்டங்கள் மூலம் வேகமான ஆரம்பத்தைப் பெற்றது.



எனினும், லியாம் லிவிங்ஸ்டோன் சாமிக கருணாரத்னவிடமும், பெயார்ஸ்டோ பினுர பெர்ணான்டோவிடமும், மோர்கனும், சாம் பில்லிங்ஸும் துஷ்மந்த சமீரவிடமும் குறிப்பிட்ட இடைவெளிகளில் ஆட்டமிழந்திருந்தனர்.


எவ்வாறெனினும், ஜோ றூட்டின் ஆட்டமிழக்காத 79 (87), மொயின் அலியின் 28 (57) ஓட்டங்களோடு 34.5 ஓவர்களில் வெற்றியிலக்கை இங்கிலாந்து அடைந்து. இறுதியில் அலி, சமீரவிடம் வீழ்ந்திருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக வோக்ஸ் தெரிவானார்.

இந்நிலையில், இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டியானது, இலங்கை நேரப்படி மாலை 5.30 மணிக்கு ஓவலில் இடம்பெறவுள்ளது.

### யூரோ: நெதர்லாந்து

# முகாமையாளர் விலகினார்




நெதர்லாந்து சர்வதேச கால்பந்தாட்ட அணியின் முகாமையாளரான பிராங்க் டீ பொயர், தனது பதவியிலிருந்து விலகியுள்ளதாக நெதர்லாந்து கால்பந்தாட்டச் சங்கம், நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

யூரோ கிண்ணத் தொடரிலிருந்து, செக் குடியரசிடம் இறுதி 16 அணிகளுக்கான சுற்றுப் போட்டியில் தோற்று நெதர்லாந்து வெளியேறியமையைத் தொடர்ந்தே இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

கடந்தாண்டு செப்டெம்பர் மாதத்தில் பணிக்கமர்த்தப்பட்ட டீ பொயர், அடுத்தாண்டு வரையிலான ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட்டிருந்தார்.

# விம்பிள்டனிலிருந்து வெளியேறிய செரீனா



விம்பிள்டன் டென்னிஸ் தொடரிலிருந்து உலகின் எட்டாம் நிலை வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் வெளியேறியுள்ளார்.

பிரித்தானியாவின் தலைநகர் இலண்டனில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பெலாரஸின் அலெக்ஸான்ட்ரா ஸஸ்னோவிச்சுடனான முதலாவது சுற்றுப் போட்டியில் 3-3 என முதலாவது செட்டில் காணப்பட்டபோது, வலது கால் காயம் காரணமாகவே தொடரிலிருந்து ஐக்கிய அமெரிக்காவின் செரீனா வெளியேறியிருந்தார்.

### பெர்ணான்டின்ஹோ

# புதிய ஒப்பந்தம் கைச்சாத்து



இங்கிலாந்து பிரீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் மத்திய கள வீரரான பெர்ணான்டின்ஹோ, புதிய ஓராண்டு ஒப்பந்தமொன்றை கழகத்துடன் கைச்சாத்திட்டுள்ளதாக அக்கழகம் அறிவித்துள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டு சிற்றியில் இணைந்த 36 வயதான பெர்ணான்டின்ஹோ, 350 போட்டிகளில் சிற்றிக்காக விளையாடியுள்ளார்.



### யூரோ:

# ஜேர்மனியை வீழ்த்தி காலிறுதியில் இங்கிலாந்து

யூரோ கிண்ணத் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு இங்கிலாந்து தகுதி பெற்றுள்ளது.

இங்கிலாந்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ஜேர்மனியுடனான இறுதி 16 அணிகளுக்கான சுற்றுப் போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் வென்றதன் மூலமே காலிறுதிப் போட்டிக்கு இங்கிலாந்து தகுதி பெற்றுள்ளது.

இந்நிலையில், ஜேர்மனி தொடரிலிருந்து வெளியேறியது.

இங்கிலாந்து சார்பாக, ரஹீம் ஸ்டேர்லிங்க், ஹரி கேன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, ஸ்கொட்லாந்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற சுவீடனுடனான இறுதி 16 அணிகளுக்கான சுற்றுப் போட்டியில், மேலதிக நேரத்தில் 2-1 என்ற கோல் கணக்கில் சுவீடனை வென்று காலிறுதிப் போட்டிக்கு உக்ரேன் தகுதி பெற்றுள்ளது.

உக்ரேன் சார்பாக, ஒலெக்ஸான்டர் ஸின்ஷென்கோ, அர்டெம் டொவ்பைக் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, சுவீடன் சார்பாகப் பெறப்பட்ட கோலை எமில் பொர்ஸ்பேர்க் பெற்றிருந்தார்.

### இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டி;

# தென்னாபிரிக்கா வெற்றி



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான மூன்றாவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியில் ஓர் ஓட்டத்தால் தென்னாபிரிக்கா வென்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், கிரனெடாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகளின் அணித்தலைவர் கெரான் பொலார்ட், தென்னாபிரிக்காவை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தார்.

இந்நிலையில், முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 167 ஓட்டங்களையே தென்னாபிரிக்கா பெற்றது. மக்கோய் நான்கு ஓவர்களில் 22 ஓட்டங்களையே விட்டுக் கொடுத்திருந்ததுடன், பிராவோ 25 ஓட்டங்களையே விட்டுக் கொடுத்திருந்தார்.

பதிலுக்கு, 168 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 166 ஓட்டங்களையே பெற்று ஓர் ஓட்டத்தால் தோல்வியடைந்தது. இதில், ஷம்சி நான்கு ஓவர்களில் 13 ஓட்டங்களையும், நொர்ட்ஜே 29, என்கிடி மூன்று ஓவர்களில் 22 ஓட்டங்களையே விட்டுக் கொடுத்திருந்தனர். இப்போட்டியின் நாயகனாக ஷம்சி தெரிவானார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 1 ஜூலை 2021, இல. 8, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.